போன் நெ: 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 14—2—54 | இதழ் 33

கும்பமேளாக் காட்சிகளிற் சில!



நடு ராத்திரியிலிருந்து காலை மலருமுன் குளித்தால் தான் நல்லதாம்! இந்தக் குளிப்பு விழாவை அறிவித்துச் செல்லும் பாலயோகி இவர்!!

நாக சாதுக்களில் ஒருவர். உடம்பில் ஒருத்திய அலகில், தராசை மாட்டித் தொங்க வைத்திருக்கிறார்.

இந்த யோகி முள்மீது கிடந்தபடி 'தபஸ்' செய்பவராம்! இதைக் காட்ட லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் இவர் வந்திருக்கிறார். ஏன்?

இவர் ஒரு சாது உலகைத் துறந்த முனி புங்கவருக்கு நெற்றிக்கு வைத்துக் கொள்வதில் தான் எவ்வளவு சிரத்தை! கையிலே கண்ணாடி—வெயிலுக்குக் குடை இத்தகைய சாமிகளைக் கும்பிடத்தான், ஆயிரக்கணக்கில் மடிந்தனராம்!

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!

திராவிடநாடு

காஞ்சி] 14—2—54 [ஞாயிறு

ஐக்கிய முகாரி!

'ஆகவே தோழர்களே! எமக்கு ஓட்டுப் போடுங்கள்'

இது அந்தக் காலம்.

'ஐயயோ! தோழர்களே – எமக்கு ஓட்டுப்போடாமலிருந்துவிடாதீர்கள்'

இது, இந்தக் காலம்.

*

அப்போது, நாட்டு மக்களின் உள்ளங்களைத் தொடக்கூடிய திட்டங்களும், செயல்களும் இருந்தன. அதனால், அவைகளையெல்லாம் விளக்கி, 'ஆகவே ஓட்டுப் போடுங்கள்', என்று கம்பீரமாகக் கேட்டுக் கொள்ள முடிந்தது.

இப்போது, நாட்டு மக்களின்முன் நடமாடவேமுடியாத நிலையேற்பட்டுவிட்டதால், 'ஐயயோ! ஓட்டுப் போடாமலிருந்திடாதீர்' என்று அலற வேண்டியிருக்கிறது.

*

அறுபது வருடத்திய பயிரான, அரசியல் கட்சிக்கு, இந்த 'கதி' ஏற்பட்டிருப்பது, பரிதாபமான காட்சிதான்! ஆனாலும், என் செய்வது? அதனைக் கட்டியாள்வோரே, கத்தி எடுத்தல்லவோ, வெட்டி சிதைத்து வருகின்றனர்! இந்த விபரீதம், அதன் தலைவர் பண்டிதரின் உள்ளத்தில் பன்மடங்கு உறுத்தியிருப்பதாலேயே, தேர்தலில், கூவியிருக்கிறார்—காங்கிரசுக்கு ஓட்டு போடாமலிருந்து விடாதீர்கள்', என்று.

புயல் வேகத்தில் கேரளமெங்கும் சுற்றினாராம் — பண்டிதர். பல இடங்களில், பேசியுமிருக்கிறார். அந்தப் பேச்சுகளின் இறுதியில், 'காங்கிரசுக்கு ஓட்டுப் போடாவிட்டால் —மக்களே!— நீங்கள்தான் கஷ்டமடைய வேண்டும்; என்று முகாரி பாடியிருக்கிறார்.

*

அங்கே நடைபெறப் போகும் தேர்தல், விசித்திரமானது! பொதுத் தேர்தல் நடந்து இரண்டு ஆண்டுகள் முடியுமுன்னரே, புதுத் தேர்தல் வந்திருக்கிறது, திருவாங்கூர் மக்களுக்கு. காரணம், கடந்த தேர்தலில் காங்கிரஸ் பெற்ற தோல்வியும்— எதிர்க்கட்சிகளடைந்த வெற்றியுமேயாகும். நீலத் திரைக் கடல் ஓரத்திலே, நின்று தவழும் இந்தத் திருவிடத்தின் தீர்ப்பு— அகில உலகெங்கும், ஆசிய ஜோதியின் 'நிலையை' வெட்ட வெளிச்சமாக்கிற்று! அதனால் மீண்டும் தேர்தல் வைத்து, தன்னுடைய புகழை நிலை நாட்டிக் கொள்ளத் தவியாய்த்தவிக்கிறார், நேரு. இதனாலேயே, பம்பாயிலிருந்தும், சென்னையிலிருந்தும் அமைச்சர்கள் போய், சங்கநாதம் செய்கின்றனர். அது போதாதென்று, அவரும் வந்து, ஆங்காங்கும்தன்னுடைய 'ஜோதி' யைக் காட்டி இருக்கிறார்.

அங்கிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபையை, எதிர்க்கட்சி, சட்டசபையில் தோற்கடித்ததுமே, ஆட்சிப் பொறுப்பை எதிர்க் கட்சி வசம் ஒப்புவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், புதுத் தேர்தல் நடத்த முடிவு செய்தார் நேரு. இது அவருடைய நேர்மையற்ற நிலையை உலகுக்கு, விளக்கியிருக்கிறது. எனினும், தான் சென்றதால் தன்னுடைய கட்சி ஜெயித்ததாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறார். இதற்கு ஏதுவாக, முன் ஆண்டு தோற்ற அதே மந்திரி சபையையும் ஆட்சியில் வைத்திருக்கிறார். அப்படியிருந்தும், ஐயம் நீங்காததால், மற்றும் சில உபாயங்கள், மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த முறைகளைப் பம்பாய் ஏடு 'டைம்ஸ் ஆப் இந்தியா' சுட்டிக்காட்டுகிறது.

திருவாங்கூரில் குறிப்பிட்ட அளவு மக்கள் கிருஸ்துவர்கள் என்பதால், கிருஸ்துவப் பாதிரிமார்கள், அவர்களையெல்லாம் பயமுறுத்தி அறிக்கைகள் விடுத்துள்ளனராம்.

1 காங்கிரசை எதிர்த்து ஓட்டுப் போட்டால், நீங்கள் எல்லோரும், கர்த்தர்—போப் — ஆகியோருக்கு எதிராக நடந்துகொண்டதாகக் கருதப்படுவீர்கள்.

2 அப்படி ஓட்டுப்போடமலிருப்பது, மகாப் பெரிய பாபம்.

3 காங்கிரஸ், மதத்தை ஒப்புக்கொண்டதாகும்.

இவ்வண்ணம் துண்டுப் பிரசுரங்கள், வெளியிடப்பட்டுள்ளனவாம். இதுமட்டுமின்றி தேர்தலன்று, எல்லாக் கிருஸ்துவர்களையும் மாதா கோவிலுக்கு இட்டுவந்து, அங்கிருந்து நேரே 'ஓட்டுச் சாவடிக்கு அழைத்துச் செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். இதற்கு, 'அமெரிக்க' உதவியும், ஒரு காரணமாம்.

இவ்விதம், தேர்தலில் வெற்றி பெறக் குறுக்குவழிகள்யாவும் செய்யப்பட்டும்கூட, நேருவுக்கு நம்பிக்கை வராததால், மக்களைப் பார்த்து ஓலமிட்டிருக்கிறார் "நீங்கள் காங்கிரசுக்கு ஓட்டுப் போடாமலிருந்தால், ஆபத்து! ஆபத்து!!" என்பதாக.

*

அப்படி ஓலமிட்டபோது, அந்த 'ஆபத்தை' அவர் கூறினாராம் — "காங்கிரசுக்கு ஓட்டுப் போடாவிட்டால், தேசத்தின் ஐக்கியமே பாழாகிவிடும். ஏனெனில், காங்கிரஸ் தான் ஐக்கியத்தின் சின்னம். அதனால்தான் ஐக்கியத்தை நிலை நாட்ட முடியும்" என்று. இந்த விளக்கத்தைக் கேட்டபோது, நகைச்சுவையாயிருக்கிறது நமக்கு! காங்கிரஸ் ஐக்கியத்தின் சின்னமாம் — அவர், கூறுகிறார். அப்படி, திருவனந்தபுரத்தில், பேசிய நேரு—நாகர்கோவிலில் இப்படி பேசியிருக்கிறார்" திருவாங்கூரிலுள்ள தமிழகப் பகுதியை உடனடியாகப் பிரித்து தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டு

மென்று, காங்கிரஸ்காரர்கள் தனியாக நின்று சண்டையிடும் செய்தியைக் கேட்க வருந்துகிறேன். இப்படியா, இந்த நேரத்தில் ஐக்கியமில்லாமல் நடந்துகொள்வது? உங்களால்தானே ஆட்சி தோற்றதாம்! இப்படியா, ஒழுங்குமுறையில்லமல், நடந்துகொள்வது? நீங்கள் எல்லாம் இப்படிச்சிதறிநின்று சண்டையிடுவதால், காங்கிரசின் ஐக்கியமல்லவா, பறிபோகிறது?!! என்பதாக.

திருவனந்தபுரத்தில், ஐக்கியத்தின்சின்னம்காங்கிரஸ்என்றுபேசிய நேரு, நாகர் கோயிலில் காங்கிரசின் நிலையை வெளிப்படுத்தியிருக்கிறார்! 'காங்கிரசுக்குள்ளேயே, இவ்வளவு பிளவுகள் இருப்பதா! என்று கேட்டிருக்கிறார்.

அது மட்டுமல்ல; தேசத்தின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும்' காங்கிரசைப்பற்றி, பம்பாய் மாகாணகாங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல், பண்டிதநேரு கேரளத்தில் பேசிய அதே நாளில், ஆமதாபாத்தில் பேசிய போது கூறியிருக்கிறார்,

காங்கிரஸ் கட்சி, சிதைந்து வருகிறது.

சர்க்காருக்கும், கட்சிக்குமிடையில் ஒற்றுமை இல்லை.

இப்படிப்பட்ட நிலைஇருப்பதற்குப் பதில் காங்கிரஸ் ஸ்தாபனத்தையே அழித்து விடலாம்.

அதற்குப் பதில் காங்கிரஸ் சட்டசபைக்கட்சி யென்பதாக யென்றை அவமத்துக் கோள்ளலாம்.

எஸ். சே. பட்டீல்—பம்பாய் தலைவர்—காங்கிரசின் நிலை குறித்து, கூறுகின்ற விளக்கம், இது! ஆனால், பண்டிதர், காங்கிரசே ஐக்கியத்தின் சின்னம் என்கிறார்!! இந்த ஐக்கியத்தின் லட்சணம்தான், 'குமரிமுதல் இமயம்' வரை, சிரிப்பாய்ச் சிரிக்கிறதே. ஐக்கியம் காங்கிரசில்தான் இருக்கிறதென்று பேசிய பண்டிதர், அதனைத்தாம்வேறு இடத்தில்கண்டதாகவும் 6—2—54ல் திருச்சூரில் பேசியிருக்கிறார்—பாருங்கள்.

“இந்தக் கும்பமேளா விழா ஏழாவது நூற்றாண்டிலிருந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. நேற்று நான் அலகாபாத் கோட்டையிலிருந்து, கும்பமேளாவுக்குக் கூடியிருந்த மக்கள் திரளைப் பார்த்த போது, எந்தக் காலத்திலும் பற்பல ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டுள்ளன இந்திய சரித்திரத்தைப் பிரதிபலிப்பதாக இக்கூட்டத்தைக் கண்டதும் நான் உணர்ந்தேன்”

“நாட்டின் பலபாகங்களிலிருந்தும் அங்கு குழுமியிருந்த இந்திய மக்களை ஒன்றுபடுத்தும் ஆதாரமாகவும் அது காணப்பட்டது” என்று சொன்னார்.

இப்படி யெல்லாம் இடத்துக்கேற்ற மாதிரி பேசும் அவர் கூறியிருக்கிறார், அவ்விதம்! என்ன செய்வது? முகத்தில் கரிக்கோடு ஏற்படாமலிருக்க வேண்டுமே! அந்த, ஆசை—இப்படியெல்லாம் பேசச் செய்கிறது!! இந்தப் பிரசங்களாலா, இடிந்த கோட்டையை, நிமிர்த்திட முடியும்? காங்கிரஸ் கட்சியையும் நிலை நிறுத்திட முடியும்?

சர்க்கஸ் கூண்டு

லட்சுமணபுரிக்கருகில், ஏழு வயதுப் பையன் ஒருவனைக் காட்டில் கண்டெடுத்தனராம்! ஓநாய்போல், ஊளையிட்டவண்ணம், பச்சை மாமிசங்களைத் தின்றானும் — கைகளைக் கால்கள் போல நினைத்துக்கொண்டு மிருகம் போலவே நடக்கிறானும். இவனை, டாக்டர்கள் பலர் அழைத்துப்போய் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்களாம். இந்தச் சிறுவனை, ஒரு வயதுக் குழந்தையாயிருக்கும் போது, தாயினருகில் படுத்திருந்த நேரத்தில், நள்ளிரவில் ஓநாய் ஒன்று கௌவிக்கொண்டு ஓடிப்போயிற்றாம். அதன் பராமரிப்பிலேயே, இத்தனை நாட்களும் இருந்தபடியால், ஓநாய்க்குணம் முழுமையும் பையனிடமும் படிந்துவிட்டதாக அறிஞர்கள் கூறுகிறார்கள்! —அந்தப் பையனைப் பற்றிய ஆராய்ச்சி, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மிருகத்தின் பராமரிப்பில் வளர்ந்ததால், பையன், அந்தச் சுபாவத்தைப் பெற்றான். பழகுவோரின் சூழ்நிலை—தகுதி— தன்மைக்கேற்றபடி மனிதர்கள் பலரது தன்மைகளும் இருப்பதைக் காண்கிறோம்.

மிருகங்கள் காட்டில் மட்டுமல்ல; நாட்டிலும் இருக்கின்றன—மனித உருவில், நடமாடியவண்ணம். இந்த மிருகங்களை ஆராய்ச்சிசெய்ய, டாக்டர்களால் முடியாது.

ஓநாய்ச் சிறுவனை, சிகிச்சை செய்து, மனித சுபாவத்துக்குத் திருப்பக்கொண்டுவந்து விடலாம் என்று டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டில் மனித உருவில் உலவும் மிருகங்களை மனிதர்களாக்க, டாக்டர்களாலா முடியும்? பெரிய பிரச்னை — பலர், கவனிக்க விரும்பாத பிரச்னை. ஆனால், இது கவனிக்கப்படும் வரையில், அழகான மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், பட்டப்படிப்பும், சட்ட ஞானமும், இருந்தென்ன பயன்?

இதோ, சில வகைகளைப் பார்ப்போம்.

* * *

“எல்லப்பன், இருக்கிறானே, சார்! தங்கக்கம்பி. எது சொன்னாலும் தட்டாமல், செய்வான். இரவு—பகல்—எந்நேரமானாலும், எவ்வளவு தூரத்திலிருந்தாலும் கொண்டு வந்து தருவான். எதிர்த்துப் பேசமாட்டான். கொடுத்ததைத் தின்பான், கொடுக்காவிடில், வாய்திறந்து கேட்கமாட்டான். அவ்வளவு சாது: பசு போன்ற குணம்”

* * *

“பசுவா, அவன்? போங்க, சார்! அன்னைக்கு, நான் ஒருவேலை சொன்னேன். பத்துமைலிலுள்ள பக்கத்தூருக்குப்போய், ஊறுகாய் போட ஒரு மூட்டை எலுமிச்சம்பழம் வாங்கிவரும்படி. 'இல்லீங்க! என்வீட்டிலே, இன்னிக்குப் பிரசவமுங்க' என்று சொன்னான். அவனைப் போய், பசு, என்கிறீர்களே—நொண்டிக் குதிரை, சார்! சறுக்கினது சர்க்கு. அவனுக்கு!!”

* * *

எடுபிடி, எல்லப்பன்—ஒரு எஜமானிடம், அடங்கியொடுங்கி வேலை செய்யும்போது, பசு. தன்னுடைய மனைவியின் பிரசவத்தின் காரணமாக, போகமுடியாமையைச் சொன்னதால், நொண்டிக் குதிரை. இவ்விதம், இவனைப்பற்றி, இருவரும் பேசிவிட்டார்களல்லவா? இவர்

களைப்பற்றி, அவனிடம், கேட்போம்.

* * *

"என்னுங்க! அடங்கி ஒடுங்கி வேலைசெய்தால்தானே, எனக்குப் பிழைப்பு. அதனால், எஜமான் இட்ட கட்டளையை மறுக்காமெ செய்வேனுங்க. அதிலும், இந்த எஜமான்களிலே எத்தனை ரகம் தெரியுங்களா? ஒருத்தர் குள்ளநரிங்க! அன்பா பேசுவதுபோல பேசிவிட்டு, வயிற்றிலே அடிப்பாரு. இன்னும் சிலர், நம்ப கஷ்டத்தைச் சொன்னா, புலிபோலச் சீறிப் பாய்வாங்க!"

*

சிறு காட்சி இது! ஆனால், பசு—குதிரை—புலி—நரி, ஆகியவைகளைக் காண்கிறோம். எல்லப்பன், தட்டாமல் வேலைசெய்தால், அதற்குப் பெயர், பசு. கொஞ்சம் தாறுமாறாக நடந்தால் சூட்டப்படும் பட்டம் நொண்டிக் குதிரை!! இவ்வண்ணம் தன்னை அழைத்த எஜமான்களைப்பற்றி, அவன் கூறுவது—குள்ளநரி, புலி எனும் வார்த்தைகள்.

காடல்ல, அவர்கள் இருப்பது; நாடு. ஆனாலும், உழைப்பவனின் நிலைமையையும், அவன் உழைப்பிலே வாழ்வோரின் குணதிசயங்களையும் நாம் நன்றாக அறியமுடிகிறது.

இதே எல்லப்பனை, 'ஏன், எல்லப்பா! இப்படிப்பட்ட புலி, நரிகளிடம் ஏன் அவஸ்தைப்படுகிறாய்?' என்று கேட்டுப்பாருங்கள். என்ன சொல்வான், அவன்—"என்னங்க பண்றது! கழுதை, பன்றிக்குட்டிகளைப்போல, நாலைஞ்சைப் பெத்துட்டாளே! இந்த வேலையும் இல்லேன்னா—நாயைப்போல, விழுந்து பிடுங்குங்க!!"

'கழுதை'—என்றது, மனைவியை! அவள், 'நாயைப்போல' ஆத்திரப்படுவாளாம்! ஏனெனில், 'பன்றிக்குட்டிகள்' நாலைஞ்சு இருக்கிறதாம்!! —அவனது மனைவியும், உலகில் உலவும், மனித ஜாதிதான். ஆனாலும், இந்தச் சுபாவத்தோடு, இருக்கவேண்டிய நிலையிலிருக்கிறாள்! அதனை வர்ணிக்கும்போது, அந்த மிருக சுபாவங்களோடு ஒப்பிடுகிறான், எல்லப்பன்!!

எல்லப்பனின் எஜமானின் மனைவியைப்பற்றி இன்னொருவரைக் கேட்போம். அவர், சொல்வார்.

"ஆகா! பஞ்சவர்ணக்கிளிகளைப்போல ஆறேழு குழந்தையிருக்குங்க, அந்த அம்மாவுக்கு. எப்பொழுது பார்த்தாலும் மானைப்போல, துள்ளி ஆடிக்கொண்டே இருக்கிறார்கள்"

அவள், கழுதை! இந்த அம்மா, மான்!! உண்மையிலா? அல்ல! அல்ல!! — சுபாவத்தில் — நிலைமையில்.

என்ன காரணம், இதற்கு? குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத நிலைவரும்போது, எல்லப்பன் மனைவி, நாயாகிறாள் — கழுதையுமாகிறாள்! அந்தக் கஷ்டம், எஜமானியம்மாவுக்கு இல்லை—ஆதலால் துள்ளியோடும் மான்போல இருக்கிறாள். அவர்கள் குழந்தைகள், குப்பைமேட்டிலும் வீதிப் புழுதியிலும் உருளும், பன்றிகளைப்போலன்றி, பஞ்சவர்ணக் கிளிகளாக இருக்கின்றன!! இந்தக் கிளிகள், பெரியவைகளாக ஆகும்போது அப்பனைப்போலவே புலியாகின்றன—சில, நரியாகின்றன; எல்லப்பன், குழந்தைகள்—பசுவாகவோ, நொண்டிக் குதிரையாகவோ, காலந்தள்ள நேருகிறது.

இந்தப் பரம்பரைதான்! இன்றைய உலகம்! இந்த இரு பரம்பரைகளும், 'மனிதர்களாக' வாழும்படி ஏற்பட்டால்தான், உண்மையான மனிதர்களைக் காணமுடியும். அதற்கு இப்போதிருக்கும் சமுதாயச் சூழ்நிலை, மாறவேண்டும். இதனை மாற்ற 'இன்செக்ஷனும்' 'மருந்துப் புட்டியும்' போதாது — டாக்டர்களாலும் முடியாது.

தீர்க்கமுடியாத இந்தப் பிரச்னையைப்பற்றி, இன்றைய பொதுவாழ்வில் உலவும் சிலரைச் சந்திப்போம்.

* * *

"ஆண்டவன் லீலா விநோதங்களை அறிய, யாரால் முடியும்? அண்டசராசரங்கள் அனைத்திலும் இருக்கிறான்! அவன் ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! ஆதலால் உலகத்தில் நடைபெறும் எல்லாம் அவனுடைய திருவிளையாடல்கள் தான். இதைத்தான், கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார். இந்த மாய உலகில், ஆண்டவனின் சிருஷ்டிகளையெல்லாம் தாண்டி எவனொருவன் மோக்ஷ சாம்ராஜ்யத்துக்காக அல்லும் பகலும் பாடுபடுகிறானோ, அவனே ஈசனின் திருவடியைச் சேரமுடியும். எல்லாம் அவன் செயல்!" ஆகமங்களைக் கரைத்துக்குடித்த, வேதாந்தியின், விளக்கம் இது.

"என்ன செய்வது? எல்லாம் அவன் தலைவிதி! முன்பிறப்பிலே, என்னென்ன பாவங்கள் செய்தோமோ — இப்படி நாம் இருக்கிறோம்! அவர்கள் என்னென்ன புண்ணியங்கள் செய்தார்களோ—அவர்கள் சுகமாக இருக்கிறார்கள்! ஊ...ம்... இந்த ஜென்மத்திலாவது பாபம் செய்யாமலிருப்போம்" — இப்படி சாதாரண ஜனங்கள் கூறுகிறார்கள்.

"வீணா, பேதத்தை வளர்த்துண்டே, போறா! இதனால் என்ன பிரயோஜனம்! ஏதோ, இந்த உலகத்திலே இருக்கிறவாளுக்கும், பெரியவா செய்து வைச்ச ஏற்பாடுகளை மனசிலே நினைச்சு, காலத்தைத் தள்ளிவிட்டுப் போகாமெ, 'அது ஏன், இது ஏன்' என்றெல்லாம் கேட்டுண்டு, வீணா பேதத்தை வளர்த்துண்டு, போறா! இதனால் என்ன லாபமோ? நேக்கு ஒண்ணும் புரியலே!"—இங்ஙனம், சமுதாயத்தின் உச்சியில் இருப்பவர் தெரிவிக்கிறார்.

"உண்மைதான் — ஒப்புக்கொள்கிறோம். உயர்வு, தாழ்வு — ஏழை, பணக்காரன், இந்தப் பிளவுகள் இருப்பது, ஆபத்துத்தான். இது இல்லாமல் இருக்கவேண்டுமென்பதுதான், எங்கள் பண்டித நேருவின், கொள்கையும். ஆனால், என்ன செய்வது? நாடு இருக்கிற நிலையில், இதுவா, முக்கிய விஷயம்! அதோ—அமெரிக்கா, இதோ ரஷ்யா—அருகில் பாகிஸ்தான்—இவைகளையெல்லாம் பார்த்து, அனுசரித்துப்போக வேண்டியிருக்கிறதே?" — இவ்வண்ணம் தேசீய நண்பர், தெரிவிக்கிறார்.

* * *

இவ்விதம், ஒவ்வொருவரும், தத்தமது கோணத்தில், இந்தப் பிரச்னைக்கு விமர்சனம் கூறுகிறார்கள்! விளக்கம் தருகிறார்கள்!! — ஆனால், இதைத் தீர்க்க, முழுப்பரிகாரம், காணவேண்டுமென்று சொல்லும் நம்மீது பாய்கிறார்கள் — சீறுகிறார்கள். இந்த வேதனை விளையாட்டைக் கண்டு, அழுவதா! சிரிப்பதா!! நீங்களே சொல்லுங்கள்.

மத ஓடத்தில் ஏறிய மாந்தரே!

சில ஆண்டுகளுக்கு முன்பு, 'கல்கி' ஆசிரியர் கட்டுரையொன்று தீட்டினார்.

"பாரீர்! சுயமரியாதைக்காரர்களே—இவ்வளவு வருஷமாகக் கத்தினீர்களே, என்ன ஆயிற்று? இதோ, குடந்தை மகாமகத்திலே பல்லாயிரக்கணக்கான ஜனங்கள், குளிக்கிறார்களே!" என்று கிண்டல்கணை விடுத்தார்.

அவரது பாணியில், பேசிச் சந்தோஷப்படும், ஆத்மாக்கள், இப்பொழுதும் பலர் இருக்கின்றனர்.

"இந்தக் கழகக்காரர்கள், அது இல்லே; இது இல்லே—என்று பேச ஆரம்பிச்சது, ரொம்ப நல்லதாப் போச்சு! ஏன்னு, கேட்கிறேளோ? இவா, இப்படிப் பேசறதனாலே எல்லா ஆஸ்திகாளுக்கும் மனசிலே, ஒரு வேகம் ஏற்பட்டுப்போச்சு. எங்கெங்கோயிருந்த பிள்ளையாருக் கெல்லாம் யோகம். கோயில் எல்லாம், புதுப்பிக்கிறா. மார்கழி மாசமெல்லாம் திருப்பாவை, திருவெம்பாவை—உத்சவங்கள், மகாநாடுகள்"—இவ்விதம் பேசுகின்றனர்.

இப்படிப் பேசுவோர், திண்ணையிலிருப்போரென்றால்—சகஜம். பேசுவதற்கு, ஏதாவது, பொருள் வேண்டுமென்பதற்காக, ஏதையாவது அசைபோடுவார்கள், அவர்கள்.

ஆனால், நாடாளும் அமைச்சர்கள் பேசுகிறார்கள்—இப்படிப் பேசுவதுதான், அமைச்சர் தொழில் பார்க்க இலாயக்கு, என்கிற நிலைமையும் சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்ல, ஏடுகள் யாவும் இந்தக் கருத்தைப் பரப்புவதே தமது முக்கியக் கடமையென்றெண்ணி, 'யாராருக்குப் பக்தியிருக்கிறது தெரியுமா?' என்று பட்டியல்

'அ'

தரும் வேலையைச் செய்வதில், கவனம் செலுத்துகின்றன.

"ராஜாஜி, உலக அறிஞர். ஏனெனில் அவர் ஒரு பக்திமான்."

"இந்து கலாச்சாரம் எப்படிப்பட்டது, தெரியுமா? இதோ உரைக்கிறார், ராதாகிருஷ்ணன். யார் தெரியுமா அவர்? இந்திய உபஜனாதிபதி!"

"ராஜேந்திரபிரசாத், இந்தியாவின் தலைவர். அவரைப் பாரீர்! ராமேஸ்வரத்தில், அய்யர் முன் அமர்ந்து, தட்சணை செலுத்திவிட்டு, ஸ்நானம் செய்வதை"

என்று இவ்விதம், பக்தியையும் மத மார்க்கத்தையும் விளக்க, பெரிய மனிதர்கள் விஸ்டுதேடும், காரியத்தில் ஈடுபட்டிருக்கின்றன. இது, வெகு மும்முரமாக நடைபெறுகின்றது! 'ஔவையார்' படம் முதல் 'ஆட்கொண்டிக் சாசனம்', வரையில் ஆண்டவனின் லீலா விநோதங்களைச் சம்பந்தப்படுத்தி, அகமகிழ்ச்சியடைய விரும்புகின்றனர். குடகு தனலட்சுமி—ஆகா! அற்புத மகிமை. கும்பகோணத்தில், ஒருமாட்டுக்கு இரு கன்றுகள்—அடடா அவன் திருவிளையாடல். இவ்விதம் எது நேர்ந்தாலும், அச்செய்தியானாலும், அதற்கு ஆண்டவனின் மகிமையைக் கற்பிக்க ஆசைப்படுகின்றனர்.

இந்த ஆசை, இந்தபக்தர்களுக் கேற்படுவானேன்?—சிந்தனைக்குரிய கேள்வி.

இந்த மனப்பான்மை, இவர்களுக்கு மட்டும் என்றல்ல; எங்கெங்கு மத ஆதிக்கக்காரர்கள், அறிவொளியைச் சந்திக்கும்படி நேர்ந்ததோ, அங்கெல்லாம் இந்த 'அஸ்திரத்தை'யே தமது அரணாகக் கருதியதுண்டு. அமெரிக்கப் பேரறிஞர்—சிந்தனைச் செல்வர்—இங்கர்சால், இறந்தபொழுது, அங்கிருக்கும் மதவாதிகள், ஒரு செய்தியைப் பரப்பிவிட்டனர். மரணப்படுக்கையில் கிடந்தபோது, இங்கர்சால் தான் எழுதியவைகளை நினைத்து வருந்தி ஆண்டவனிடம் பாப மன்னிப்பு கேட்டுக்கொண்டார்—என்பதே, அந்தச் செய்தி.

இவ்வண்ணம், இது போன்ற அற்ப ஆசைகளின்மூலம், ஆண்டவனின் மகாத்மியத்தையும், மதக் கோட்டையையும், பலப்படுத்த முயலும் இவர்களைக் காணும்போது, அறிவுப் பாதை செல்வோர், பரிதாபம் கொள்வரே அன்றி, பயங்கொள்ள மாட்டார்கள்.

பயம் ஏற்படும்போதுதான், பொய்யும் புனைகதைகளும் தேவைப்படும்.

அந்தப் பயம், ஆண்டாண்டு காலமாக—ஆதியந்தமற்ற—ஆண்டவனின் அடியார்களுக்கே ஏற்படுகிறதென்னும் விஷயத்தைக் கண்கூடாகப் பார்க்கும்போது, அறிவுப் பாதை செல்வோர், களிக்கவே செய்வர்!

இதனால்தான் அன்பர் ஆச்சாரியார் முதல், அவரிடம் மந்திரிப் பட்டம் பெற்றவர்களாக நாக்கை ஆடவிட்டிருக்கும் 'ஐயோ, பாபங்கள்' உள்பட அனைவரையும் பற்றி, நாம் கவலைப்படுவதில்லை.

ஆனால், இப்போது அண்மையில் பிரயாகையில் நடைபெற்றிருக்கும் பெருங்கோரம், நம்மையும் பதறச் செய்கிறது.

நேருவின் சொந்த ஊருக்கு அருகாமையில், ஒரு நாளில் 316-மக்கள் பிணமாகியிருக்கிறார்கள்.

இந்தக் கோரம்பற்றி, எகிப்து நகிப், அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறார்! இஸ்லாமிய தேசமாம் பாகிஸ்தானின் கவர்னர் ஜனரலும்–பிரதமரும், வருத்தச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்!!

சாதாரணத் திருவிழா — அது பற்றி, உலகம் எங்கும் மாபெரும் எதிரொலி கிளம்பியிருக்கிறது. லண்டன்—நியுயார்க்—மாஸ்கோ—டோக்யோ—பீகிங் — எங்கும் இந்தக் கேலிக்குரல், ஒலிக்காத இடமே இல்லை.

அதிலும், கும்பமேளா விழாவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள், இவ்வளவு கோரமும், கொரியாப்போர் முனையிலா? என்றுகூட எண்ணிவிடுவர். ஆனால், பக்தி செலுத்தப்போன இடத்தில்.

கங்கையும் யமுனையும் கலக்குமிடத்தில், ஸ்நானம் செய்து பாவங்களைக் கழுவி, புண்யம் தேடப் போன இடத்தில் நடந்திருக்கிறது. இந்தக் கொடுமைகளைக் கண்ணாரக் கண்டாராம், பண்டிதநேரு.

கல்யாணிக்குப் போகும் வழியில், விழாவுக்கு முன்னே அந்த இடத்துக்குப் போய், ஏற்பாடுகள் சரியாக இருக்கிறதாவென்று கவனித்தாராம், நேரு.

குடியரசுத் தலைவர் ராஜேந்திரபிரசாத்தும், இந்த கோணங்கிக்கூத்தில் கலந்து கொள்வதற்காக, பரிவார சகிதம் சென்றிருந்தாராம்.

அங்கே நடைபெற்ற இந்தக் கோரத்துக்கு, பம்பாய் ஏடொன்று, புதுக்காரணம் ஒன்று கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறது—செத்த வீட்டிலும் அடித்தது ஆதாயம் என்று கருதுவானாமே, கள்வன்!—அதைப்போல, அந்தஏடுகாரணம், கூறுகிறது.

நிர்வாண நாகசாமிகளைக் காண மக்கள் அடித்து மோதிக் கொண்டு சென்றனர்— அவர்களைக் கண்டு, பாதங்களைக் கும்பிட்டால் புண்யம் கிட்டும் என்பது நம்பிக்கை; அதனால் அப்படி நெருங்கிச் சென்றனர். அதனால் இந்தக் கோரம்ஏற்பட்டது, என்பது எல்லோருக்கும் தெரிந்த காரணம்.

ஆனால், பம்பாய்ஏட்டுக்கு இந்தச் சந்தர்ப்பத்தையும் 'பயன்படுத்தும்' ஆசை விடவில்லை. வெளிநாட்டினர், கேள்வியுற்றால், கேலிசெய்வார்களல்லவா, 'இவ்வளவு அநாகரீகமான மக்களா, இந்தியாவிலிருப்போர்?' என்று. அதனால், புதுக் காரணம், கூறுகிறது—நாகசாமிகள், ஊர்வலமாக வந்துகொண்டிருந்தபோது, யாரோ, ஜனங்கள் மத்தியில், 'ஜவஹர்லால்நேரு, வருகிறார்!' என்று சொல்லிவிட்டனராம். அதனால், மக்கள் அடித்துமோதிக் கொண்டு, 'நேருவா? எவ்வளவு பாக்கியம்! அவருடைய பாததூளியைத் தெரிசிக்கும் பாக்யம்கிடைக்க வேண்டுமே!' என்று பாய்ந்தடித்துக்கொண்டு, ஓடினராம். அதனால், ஏற்பட்டதாம், இந்தக்கோரம்!

இந்தக் காரணத்தைக் கண்டு பிடித்த ஏட்டின் எண்ணம்' அடடா! பாருங்களய்யா, பண்டிதருக்கு இந்திய மக்களிடமிருக்கும் செல்வாக்கை. கடவுள்போல் நினைத்து, ஜபிக்கின்றனர். அவரைக் காணப் போனதில், ஆயிரக்கணக்கானோர் செத்தனர். ஆகவே, ஐசன்ஹோவரே! ஜாக்ரதையாயிரும். நேருவிடத்தில். சர்ச்சிலே! புரிந்துகொள்ளும், நேரு யார் என்பதை. மாலென்கோவ்! மருட்டாதீர், நேருவை!

ஆனால், பாபம்! இந்தச் செய்தியைக் கண்டு பிடிக்குமளவுக்கிருக்கும் விவேகம், இன்னும் சில விபரங்களைப்பற்றி யெண்ணுவதில் அந்த ஏட்டுக்கு இல்லாமற் போய்விட்டதே யென்றுதான் வருத்தப்படுகிறோம்.

நாகசாமிகள்!—அவர்கள் உருவமும், நிர்வாணத் தோற்றமும் கோரமானது. அத்தகைய கும்பலில், நேருவும் வருகிறார் — என்றால், நேருவைப்பற்றி என்ன எண்ணுவர் வெளிநாட்டினர்?

அது போகட்டும்–ஆண்டவனைத் தெரிசிக்கப்போன மக்கள், அந்தக் காரியத்தை சிரத்தையோடு கவனிப்பதற்குப் பெயர், பக்தியா? இல்லை! பண்டிதநேருவின் பாதத்தைத் தொடப் பாய்வதற்குப் பெயர் பக்தியா?

இன்னும்தெளிவாகச்சொன்னால், பண்டிதருக்கு அங்கென்ன வேலை? பாபங்களைக் கழுவ, சாதாரண மக்கள் அடித்து மோதிக்கொண்டு அங்கு சென்றனர். பார் புகழும் இவர் சென்றதேன்? இவர் ஏற்றிச் சுமக்கும் பாபமூட்டை எது?

பண்டிதர் மட்டுமல்ல — 'ஜனாதிபதி'யும் சென்றிருக்கிறார், அவர்கள் கண்ணெதிரில், இந்த அலங்கோலம் நடைபெற்றிருக்கிறது.

இந்தச் செய்தியைக் கேள்விப்படும் அந்நிய நாடுகள், 'ஆசிய ஜோதி'யைப்பற்றி என்ன நினைக்கும்?—இந்தக் கேள்வி நம்முடைய மனதில் தோன்று முன்னரே, பண்டிதரின் உள்ளத்தில் தோன்றியிருப்பதாலேயே, அவர், அலகாபாத்தில் தெரிவித்திருக்கிறார் — 'கும்பமேளாவின் விஷயத்தை மிகைப்படுத்திக் கூறுகிறீர்கள்', என்று. அவர் அவ்வண்ணம் தெரிவித்த பிறகு கிடைத்த விபரமே வெளிவந்திருப்பது! அப்படியானால், உண்மையில் அங்கு நடந்த கொடுமைகள் என்னென்னவோ!!

*

இந்தக் கோரங்கள்பற்றி விசாரணை செய்ய, ஐக்கிய மாகாண அரசாங்கம் கமிட்டியொன்றை நிறுவியிருக்கிறதாம். இதற்குக் கமிட்டியா தேவை? உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும் இந்தக் கேட்டிற்கு, கமிட்டி போட்டிருககிறது, சர்க்கார்!!

இந்தக் கமிட்டியில் என்ன உருவாகமுடியும்? அடுத்த கும்பமேளாவின்போது, இன்னின்ன நடவடிக்கைகளை இப்படி யிப்படிச் செய்யவேண்டும் என்று வேண்டுமானால் யோசிக்கலாம். வேறென்ன யோசிக்கவேண்டும்?

இதற்காகத்தான் இக்கமிட்டி யென்றால், இது ஒரு வீண்துடைப்புக் காரியமேயாகும். ஏனெனில், இந்த கும்பமேளா விஷயமாக, ஐக்கிய மாகாண சர்க்கார் செய்திருந்த ஏற்பாடுகள் அற்பசொற்பமானவையல்ல; அவ்வளவு திறமையான ஏற்பாடுகளைச் செய்திருந்ததாக, பண்டிதரே தெரிவித்திருக்கிறார்.

அவ்வளவு ஏற்பாடுகள் — கோயிலார் அல்ல; சர்க்கார் — செய்திருந்

தும், இவ்வளவு கோரங்கள் ஏற்பட்டனவென்றால், இதற்குள்ள மூல காரணம் என்ன? யோசித்துப் பெற வேண்டியதில்லை, பதில்! மக்களிடமிருக்கும் மூடநம்பிக்கை—அதை வளர்க்கும் போலிப் பக்தி. இந்த இரண்டிலிருந்தும் மக்களை மீட்க என்ன செய்யப்போகிறார், பண்டித நேரு? நாம், காங்கிரஸ் சர்க்கார் என்று குறிப்பிடாமல், பண்டித நேருவைக் குறிப்பிடும் காரணம், அவர் ஒரு முற்போக்குவாதியென ஆங்காங்கிருக்கும் சிலர் கூறுவதால் தான்.

என்ன செய்யப்போகிறார், நேரு?

"செய்வதா! செச்சே! மக்களின் மத விஷயத்தில் தலையிடலாமா. அது, தனிப்பட்டோர் விஷயமாச்சே. சர்க்கார் தலையிடலாமா? சாதாரண இந்துமதத் திருத்த மசோதாவைக் கொண்டு வரவே, அவர் படுர்பாடு கொஞ்சநஞ்சமல்லவே! இதை எப்படித் தடுக்கமுடியும்?" என்று கூறுவார்களா, காங்கிரசிலுள்ள நேரு தாங்கிகள்.

அப்படிக் கூறுவரெனில், அவர்களுக்கு ஒரு விஷயத்தைக் கவனமூட்டுகிறோம். கும்பமேளா கோரம்பற்றி அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறாரே, நகீப்—அவர் பண்டிதரைப்போல 'பிறவித் தலைவர் அல்ல—உலகத் தலைவர் ஒருவரின் வாரிசுமல்ல. அரசியல் உலகில் திடீரென முளைத்தவர். மத நம்பிக்கையில் அதிகம் ஊறிய இஸ்லாமிய மக்கள் நிரம்பிய நாட்டை ஆளும் நிலையிலிருப்பவர். அவர், அண்மையில், ஒரு சட்டம் பிறப்பித்திருக்கிறார்.

அரசியல் சம்பந்தமான சட்டமல்ல; மத விஷயமானதுதான்.

எகிப்தில் வாழ்வோர், தம்மிஷ்டப்படி பல தாரங்களைக் கலியாணம் செய்துகொள்ளலாம் இப்படிக் கலியாணம் செய்துகொள்வதற்கு முன், முதல் தாரத்தை அழைத்து, 'நான் உன்னை விலக்கிவிட்டேன்' என்று வாய்மொழியாகக் கூறிவிட்டால், போதும்! அவளை விலக்கியதாக அர்த்தம்!! இதற்கு சாட்சிகள் இருக்கவேண்டுமென்கிற அவசியம் இல்லை.

இப்படிப்பட்ட முறை நீடிப்பதால், மகளிரின் கண்ணீர் பெருகுகிறது என்பதை அறிந்த நகீப், இனி இதுபோல செய்தால் செல்லாது—சட்டப்படி கோர்ட்டுக்கு வந்தாகவேண்டும், என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவு சாமான்யமானதல்ல; அதுவும், அங்கு.

ஆனாலும், துணிந்து செய்திருக்கிறார்.

இந்தத் துணிவு, நேருவுக்கு ஏற்படுமா?

விழா—முழுக்கு – தேர் ஓட்டம்—எனும் பெயருடன், ஒரு ஊருக்கு பலர் போய்க் கூடுவது, கூடாது.

இப்படிக் கூடுவதால் — களவு—விபசாரம்—சாவு, ஏற்படுகிறது. எனவே, சர்க்கார், இவ்விதம் கூடக் கூடாதெனத் தடை விதித்திருக்கிறது

இதனால், ஆண்டவன்மீது பக்தி செலுத்தக்கூடாதென்று அர்த்தமல்ல.

கடவுளை, 'பப்ளிக் நியூசன்ஸ்' ஆக்கி, அவரது பெயரால் பல கேடுகள் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்பதே சர்க்கார் எண்ணம்.

அவரவர் கடவுளை, தத்தமது வீட்டுக்குள்ளேயே வணங்கலாம்.

இப்படி ஒரு சட்டம் பிறப்பிக்க, நேருவுக்குத் துணிவு வருமா?

கும்பமேளா கோரத்தையொட்டி மட்டுமல்ல, நாம் இதை வலியுறுத்துவது. திருவிழா – தேரோட்டம்—எனும் பெயர்களால், நாட்டின் நாலைவிடங்களிலும் ஏற்படும் ஆபத்துக்கள் கொஞ்சநஞ்சமல்ல.

இதோ! இன்னோர் சம்பவம். பிப்ரவரி 6ந்தேதி நடைபெற்றது. சூரத்துக்கு அருகிலுள்ள ஓரிடத்தில், பூர்ணா எனும் ஆற்றினைக் கடந்து, அப்பாலுள்ள கோயிலுக்குச் சென்று திருவிழாவில் கலந்து கொள்வதற்காகப் பல பிற்பட்ட வகுப்பினர், படகுகளில் ஏறிச் சென்று கொண்டிருந்திருக்கின்றனர். கடைசிப் படகு, ஒன்று மிச்சம்! அது போய்விட்டால், பூஜா நேரத்துக்குப் போய்ச் சேர முடியாது! அதனால், கரையில் நின்ற அத்தனை பேரும் அந்தப் படகில் இடம்பிடிக்க முயன்றிருக்கின்றனர்! இதனால், படகு கவிழ்ந்து ஆண் பெண் குழந்தைகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர், ஆற்றோடு போயினராம்.

"ஆண்டவனைத் துதிக்க ஏனிந்த வீண் விழாக்கள்?—அவரவர். வீட்டுக்குள்ளேயே கொண்டாடிக்கொள்ளட்டும்! அதனால் வரும் நன்மை தீமைகளை அவரவர்களே அனுபவித்துக்கொள்ளட்டும்!!" இப்படி ஒரு சட்டம் வந்துவிட்டால், சுயமரியாதை இயக்கத்தினராகிய நமக்கும் இந்த விஷயத்தில், சிரமம்குறையும்! செய்யுமா, சர்க்கார்? செய்தால் நாம் வரவேற்கத் தயார்! இதை விட்டுவிட்டு, நம்மை ஏசவும் கேலி செய்யவும் முற்படுவதால், என்ன பலன் காணமுடியும்? சில நாட்களுக்குப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகும்! கொஞ்ச நாட்களுக்குச் சிலர் கை தட்டுவர்! ஆனால், நிரந்தரமான நன்மை ஏற்படுமா—ஏற்படத்தான் முடியுமா?

வீண் வேலையில் ஈடுபடும் அரசும்—அதற்குச் சாமரம் வீசும் ஏடுகளும்—இதற்கானவ செய்தால் கும்பமேளாவில் வீணே உயிரிழந்த பரிதாபக் கறையைக் கழுவிக் கொள்ளமுடியும். எங்கே செய்யப் போகிறார்கள்? இதோ ஓரிடத்தில், ராஜாராம் பேசியிருக்கிறாராம்—'தி. மு. க.வின் பிரச்சாரத்தால் கடவுளுக்கு அதிர்ஷ்டம்தான் வந்தது' என்று! இத்தகையவர்களிருக்கும் போது, நாம் நினைப்பது நடக்கவா போகின்றது!!

கும்பமேளா கோரத்துக்கு நாளைய தினம் புதுப் புராணம் ஏற்பட்டு—கடவுளுக்கேற்பட்ட கோபாக்கினியின் காரணமாகவே இந்தக் காரியம் நடைபெற்றது. இது, துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனத்தின் ஒரு கட்டம்—என்று கதை கட்டினாலும் கட்டுவர், சங்கராச்சாரி போன்ற ஜடாமுடி பரம்பரையினர்! அதற்கு, ஜாலரா ஏந்திப் பாட்டுப் பாட முயன்றாலும் முயல்வர், அமைச்சர்கள்!

'ஜபமாலை' வாழும்வரை, 'அறிவொளி'க்கு இடம் ஏது? – இந்த அலங்கோலங்களுக்குத்தான் முடிவேது?

*　　*　　*

ஒருவன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போதே இறந்து விடுகிறான்—காரணம்:—மாரடைப்பு, இரத்தக்குழாய் வெடிப்பு, என்று பலப்பல கூறப்படுவதுண்டு.

ஒருவன் நடந்துசெல்லும் போதே கல்லோ புல்லோ தடுக்கிக் கீழே விழுந்ததும் இறந்துவிடுகிறான்—காரணம்:—கீழே விழும்போது உடம்பின் மிருதுவான பாகம் தரையில் மோதப்படுவதால் ஏற்படும் அதிர்ச்சி.

கட்டைவண்டி, மோட்டார் வண்டி, நீர்க்கப்பல், ஆகாயக்கப்பல் ஆகிய ஊர்திகளில் போகும்போது கூட ஒருவன் இறந்து விடுகிறான்—காரணம்:—கட்டைவண்டியின் அச்சு முறிந்துவிட்டது—கார் எதிரே வந்த லாரியுடன் மோதிற்று—கப்பல் காற்றால் உந்தப்பட்டுக் கட்டுக்கடங்காதுபோய் கவிழ்ந்துவிட்டது—ஆகாயக்கப்பல் மேகமண்டலத்தால் மூடப்பட்டுத் திசைகாண முடியாமல் திக்குமுக்காடிக் கீழே விழுந்துவிட்டது, என்பனபோன்ற காரணங்களைக் காட்டி, "எனவே, அவன் இறக்கநேரிட்டது" என்று கூறுவர்—எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஏதோ எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட திடீர் மரணங்கள் இவை என்று கூறிச் சமாதானமும் அடைகின்றனர்.

ஒருவன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடக்கிறான்—மருந்து தரப்படுகிறது—நோய் தணியவில்லை; மந்திரம் உச்சரிக்கப்படுகிறது—மாண்டுவிடுகிறான். இந்த மரணத்துக்கு யார் பொறுப்பு? நோயாளியா? மருத்துவனா? மந்திரவாதியா? நோயாளியின் உறவினரா? சமயோசிதப்படி, யாரென்று குறிப்பிடமுடியாது—ஒருவர் எப்படியும் பொறுப்பாளியாகிவிடுகிறார். மருத்துவன் நோயறிந்து மருந்து தரவில்லை—மந்திரவாதி குறையறிந்து மந்திரிக்கவில்லை. நோயாளி சரியான படி பத்தியம் இருக்கவில்லை—உறவினரின் கண்காணிப்புப் போதாது, "எனவே அவன் இறந்துவிட்டான்" என்று ஒவ்வொருவரும் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

தடியால் தாக்கப்பட்டோ, கத்தியால் குத்தப்பட்டோ ஒருவன் இறந்துவிடுகிறான்—காரணம்—தாக்கியவனுக்கும் தாக்கப்பட்டவனுக்குமிடையே இருந்த பகை அல்லது சச்சரவு.

இரவு படுத்தவன் காலையில் எழுந்திருக்கவில்லை, பிணமாகக் காட்சியளிக்கிறான்—காரணம்—அவனைப் பாம்பு கடித்துவிட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உத்தமர் ஒருவர் உபதேசம் செய்துகொண்டிருக்கிறார்—திடீரென்று பிணமாகிக் கீழே விழுகிறார்—காரணம் — வெறிபிடித்த கல்நெஞ்சன் ஒருவன் அவரைச் சுடுகிறான்.

இப்படி, ஒவ்வொருவருடைய இறப்புக்கும் ஒவ்வொரு விதமான காரணம் கூறப்படுகிறது. பின்னர், அந்தக் காரணங்கள் எடைபோட்டு மதிப்பிடப்படுகின்றன. சிலகாரணங்கள் மதிப்பிடமுடியாமலேபோய்விடுகின்றன. காந்தியடிகள் இறந்ததற்கு ஏற்பட்ட காரணத்தை எவராலும் மதிப்பிடமுடியவில்லை. கல்நெஞ்சம் படைத்த பார்ப்பன கோட்சே என்பவனால் அந்த உத்தமர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் உலகமே துக்கக் கடலில் ஆழ்ந்துகிடந்தது.

மமதாபுரி மடாதிபதி ஸ்ரீமத் மன்னார்சுவாமிகள் வைரத்தைத் தின்று இறந்துவிட்டார் — ஏன் வைரத்தைத் தின்றார் — காரணம் வெளியே சொல்லப்படுவதில்லை — என்றபோதிலும் தெரிந்துவிடுகிறது. ஆனால், யாரும் இந்தக் காரணத்தை எடைபோட்டு மதிப்பிடாமலிருப்பதில்லை. பல்லக்குச் சவாரியும், பக்தகோடிகளால் பல்லாயிரக் கணக்கில் காணிக்கை செலுத்தி வணங்கப்படும் உயர்ந்த நிலையும் பெற்றிருந்தபோதிலும் அவருடைய நடவடிக்கைகள், அவருடைய பக்தகோடிகளாலேயே வெறுக்கப்பட்டு விடுகின்றன.

யார் எவ்விதம் இறந்தாலும், அதற்கொரு காரணமும், அந்தக் காரணத்தை வைத்துச் சமாதானமும் கூற நாட்டில் ஆங்காங்கு சிலர் இல்லாமல் இருப்பதில்லை.

* * *

அலகாபாத்தில் நடைபெற்ற கும்பமேளாவில் ஆயிரக்கணக்கில் இறந்தும் காயப்பட்டும் போனார்களே! காரணம் என்ன தெரியுமா? காரணம் ஒன்றா? இரண்டா? பலப்பல!

பண்டித நேருவிலிருந்து சாதாரண பிச்சைக்காரர்வரை அக்கோர சம்பவத்திற்குக் காரணபூதர்களாக்கப்பட்டிருக்கின்றனர். பண்டித நேரு அங்கு சென்றதால்தான் இந்தக் கொடுமை ஏற்பட்டதாம்!

"Unfortunate Victims were Crushed like grains between Mill stones"

அதாவது யந்திரக் கல்லில் அகப்பட்ட தானியம் அரைபட்டு மாவாவதுபோல் அங்கு கூடியிருந்த மக்கள் அரைபட்டு மிதிப்பட்டனராம். இதற்குக் காரணம் பண்டித நேருவாம்.

> "கங்கா நதிக்கரைப் பகுதியில் சுமார் 2000 சதுர கஜத்துக்கு ஒரே சவங்களாகக் கிடந்தன. காயமுற்றவர்களும் கீழே விழுந்துகிடந்தனர்."

என்று பத்திரிகைச்செய்தியொன்று கூறுகிறது. ஆனால் இதற்குக் காரணம் பண்டித நேருதான் என்று இன்னொரு பத்திரிகை கூறுகிறது. காரணம் எதுவாகவேனும் இருக்கட்டும்—யாராகவாவது இருக்கட்டும்! நமக்கு வேண்டாம் அந்த ஆராய்ச்சி. ஆனால், கும்பமேளாவுக்குச் சென்ற பக்தகோடிகள் — கங்கையில் புனித முழுக்கு (Holy Dip) போட்டுப் புண்ணியம் சம்பாதிக்கச் சென்றவர்கள்—சூரியன், சந்திரன், குரு, ஆகிய மூன்று கிரகங்களும் ஒன்றுசேரும் புண்ணியதினத்தில்,

சர்க்கார் பங்கு

800 ஏக்கர் நிலத்தில், கும்ப விழாவை யொட்டி புது நகரம் ஒன்றை நிர்மாணித்திருந்ததாம், ஐ. மா. சர்க்கார். அந்த இடத்திலே பல குடிசைகள்—டேராக்கள் எல்லாம்—யாத்ரீகர்களுக்காகப் போடப்பட்டிருந்தனவாம். ஏராளமான டாக்டர்கள், சுகாதார அதிகாரிகள், ஊசியும் மருந்துமாக இருந்தனராம்!

கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் ஒன்று சேரும் புனித தீர்த்தத்தில் குளித்துப்பாபமூட்டையை இறக்கச் சென்றவர்கள், பரிதாபமாக ஏன் இறந்தார்கள்? 144 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சூரியனும் சந்திரனும் குருவும் ஒன்று சேருமாம்! அப்படி ஒன்று சேரும்போது புண்ய நதியில் குளிப்பது பெறற்கரிய பேறாம்! அதிலும் மௌனி அமாவாசையும் (நம்முடைய பகுதிகளில் தை அமாவாசை) சேர்ந்துவிட்டால்! அடடா சொல்லவேண்டுமா? ஆயிரமென்ன! குறைந்தது ஒரு கோடி மக்களாவது செத்திருக்கவேண்டும்—இல்லை, இல்லை, மோட்ச உலகத்திற்கு டிக்கட் வாங்கியிருக்கவேண்டும். ஆனால், சர்க்கார் தரும் கணக்கு 316! பத்திரிகைகள் வெளியிடும்கணக்கு 1000! இது மோட்ச டிக்கட் வாங்கியவர்களின் கணக்கு. இது தவிர, ஒரிஜினல் டிக்கட் கிடைக்காமல் டூப்ளிக்கேட் டிக்கட் கிடைத்ததால் அவர்கள் எல்லோரும் திரிசங்கு சுவர்க்கத்தில் இருக்கின்றனராம்! திரிசங்கு சுவர்க்கத்தில் இருப்பவர்கள் மேலே போவார்களா, கீழே வருவார்களா என்பது சொல்லமுடியாதல்லவா! அதுபோலத்தான், கும்பமேளாக் கூட்டத்தில் மிதிபட்டுக் காயமடைந்து பூலோக திரிசங்கு சுவர்க்கமான ஆஸ்பத்திரிகளில் இருப்பவர்களும், குணமாகி வீட்டுக்கு வந்துவிடுவார்களா அல்லது இறந்துவிடுவார்களா என்பதும் சொல்ல முடியாது.

*

பத்திரிகைகள் தரும் கணக்குப்படி ஐம்பது லட்சம் மக்கள் புனித முழுக்குப்போட்டிருப்பதாகத்தெரிகிறது. இந்த ஐம்பதுலட்சம் மக்களில் கேவலம் 316-பேர்தான் கடவுளின் கருணைக்கு ஆளாகியிருக்கின்றனர்.

போட்டிப் பந்தயத்துக்குப் பணம் கட்டுபவர்கள் பலராய் இருந்தும், பிரைஸ் அடிப்பவர் ஒருவர் இருவராய் இருப்பதுபோல், புண்ய நதியில் புனித முழுக்காடிப் பிறவாமையைப் பெறச் சென்ற ஐம்பது லட்சம் மக்களில் 316 பேருக்குத்தான் மோட்ச விடுதியில் இடம் கிடைத்திருக்கிறது. மிகுதி 4999684 பேரில் திரிசங்கு சுவர்க்கத்தில் (ஆஸ்பத்திரியில்) இருப்பவர்கள் போக, மற்ற அனைவரும் பாபாத்மாக்களாய் வீடு திரும்பியிருக்கிறார்கள். இவ்விதம் வெறுங்கையோடு வீடு திரும்பியவர்களின் பட்டியலைக் கவனித்தபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது போல் ஆகிவிட்டது. அந்தப் பட்டியலில் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத்தும் அவரது குடும்பத்தாரும், உ. பி. கவர்னர் முன்ஷியும், ம. பி. முதன் மந்திரி சுக்லாவும், யூனியன் மந்திரி லால்பகதூர் சாஸ்திரியும் காணப்பட்டனர். எவ்வளவோ தவத்தைச் செய்து ராஷ்டிரபதியாகவும், கவர்னராகவும், மந்திரியாகவும் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்களால், கேவலம் மோட்சவிடுதிக்குப் போகக்கூடிய புண்யத்தைச் செய்ய முடியவில்லையே என்பதை நினைக்கும்போது, எனக்குமட்டும் என்ன. அப்படிப்பட்ட பெரியவர்களின் க்ஷேமத்தில் அக்கறை கொண்ட எவருக்கும்தான் வருத்தம் உண்டாகும். 'பாரத' கண்டத்தின் தனிப்பெருந் தலைவராக இருக்கும் ஒருவரை, அந்தப் பரலோகம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதே என்பதை எண்ணிப் பார்க்கும் எந்தப் பக்தியானும்தான் வருந்துவான்.

புனித நீராடச் சென்ற 50 லட்சம் மக்களில், பண்டித நேரு எந்தக் குழுவோடும் சேரவில்லையாம். அதாவது, நீராடி மோட்சம் பெற்ற 316-பேரில் அவரும் ஒருவராகவில்லை. நீராடியும் மோட்சம் கிடைக்காத பாவிகள் குழுவிலும் அவர் சேரவில்லை. காரணம், அவர் கங்கையில் குளிக்கவில்லை.

"நீர் புனித ஸ்நானம் செய்தீரா" என்று யாரோ ஒருவர் நேருவைக் கேட்டபோது, அவர்,

> "No bodily dip; but other dips I am very much fond of bathing in the Ganga, but I have to behave myself with more restraint'

அதாவது, "உடம்பைக் குளிப்பாட்டவில்லை, வேறு விதமான முழுக்கைப் போட்டேன். கங்கையில் குளிப்பதென்றால் எனக்கு மிகவும் பிரியம். ஆனால், அந்த ஆசையை நான் மிகவும் அடக்கிக்கொண்டேன்" என்று பண்டிதர் பதில் கூறியிருக்கிறார். பண்டிதரின் இந்தப் பதில், மிகவும் பக்குவமாக வார்த்தைகளை அளந்தும் அறிந்தும் பேசிச் சாமர்த்தியமாக நடந்துகொண்டதாகக் கருதப்படும் என்று அவர் எண்ணுகிறார் போலும்!

பண்டித நேருவின் இந்தப் பதிலை, வெளிநாட்டவர் படிக்கும் போது எண்ணமாட்டார்களா, ஏன் இந்த மனுஷன் இப்படிப் பேசினார் என்று.

> "While others (50 lakhs) took bodily dip, why this gentleman had to behave himself with more restraint"

அதாவது, 'ஐம்பது லட்சம் மக்கள் கங்கையில் குளித்தபோது, இந்தப் பெரியவர் (நேரு) மட்டும் ஏன் தம் முழு ஆசையை அடக்கிக்கொண்டார்?" என்று ஒரு அமெரிக்கனோ ஆங்கிலேயனோ, அவரது அத்யந்த நண்பராக ஒரு காலத்தில் விளங்கிய ஷேக்கோதான் ஏன் எண்ணமாட்டார்கள்? ஐம்பது லட்சம் மக்கள் செய்யும் ஒரு புனித காரியத்தை, அவர்களின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் பண்டிதர் ஏன் செய்யவில்லை என்று யார்தான் எண்ணாமல் இருக்கமுடியும்! ஒருவேளை, கங்கை என்றால் என்ன? அதில் குளிப்பதால் கிடைக்கும் பயன் யாது என்பதை உள்ளபடியே அறிந்த பகுத்தறிவாளர்கள் வேண்டுமானால், அவர் குளிக்காததற்குரிய காரணத்தை அறிந்திருக்கமுடியும். ஆனால், பக்தி மார்க்கத்தில் புரள்வோர், ஏன் பண்டிதர் கங்கையில் புரண்டு தம்மைப் புனிதமாக்கிக்கொள்ளவில்லையென்று எண்ணாமல் இருக்கமுடியுமா? அதிலும், கங்கையில் குளிப்பதென்றால் ஒரு தனிப் பிரியம் தமக்கிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பண்டிதர், மூன்று கிரகங்களும் ஒன்றாகச் சேரும் புண்ய தினத்தில் புனித ஸ்நானம் செய்யவில்லையென்றால், அது, பக்தி மார்க்கத்தவரால் பலமாக யோசிக்கப்படவேண்டிய ஒன்றுதான். என்றபோதிலும், பகுத்தறிவாளர்களுக்கும், இரண்டு ஓடங்களில் ஒரே சமயத்தில் கால் வைப்பவர்.

நேரு என்பதை அறிந்தவர்களுக்கும், அவர் ஏன் கங்கையில் குளிக்கவில்லை என்பதற்குரிய காரணம் நன்கு தெரியும். கல்யாணியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குப் போகவேண்டிய அவசர—அவசிய நேரத்திலும், அவர் பிரயாகைக்குப்போய் கும்பமேளா ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டுப் போனார் என்று பக்தகோடிகள் எண்ணிப் பரவசப் பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், ஐம்பது லட்சம் என்ன, ஐம்பது கோடி மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்தாலும், அது நல்ல காரியமல்ல என்று என் மனச்சாட்சி கூறினால், நான் அந்தக் காரியத்தை ஒருபோதும் செய்யமாட்டேன் என்று பண்டித நேரு கூறுவது போன்ற ஒரு காட்சி, பகுத்தறிவாளன் மனக்கண்முன் தோன்றாமல் இருக்கமுடியாது.

* * *

பண்டித நேரு அவர்கள் பிறந்தது காஷ்மீர் — இப்போதிருப்பது டில்லி — என்றபோதிலும், அவருடைய உறைவிடம் அலகாபாத்தான். அங்கேதான் அவருக்கு வீடும் பிற சொத்துக்களும் இருக்கின்றன. கும்பமேளா என்ற 'புனித விழா', பண்டித நேருவின் பங்களாவுக்கு மிக மிக அண்மையில்தான் நடைபெறுகிறது. பண்டிதரின் வீட்டுக்கும் மேளா நடக்கும் இடத்துக்கும் இடையே சுமார் அரைக்கல் தொலைவுதான் இருக்கும். எனவே, கும்பமேளாவைப் பற்றியும், அது நடைபெறும் இடத்தைப்பற்றியும், அதை நடத்துவதன் நோக்கத்தைப்பற்றியும், மற்றவர்களைவிட அவருக்கு நன்றாகத் தெரியும்.

அத்திவரதர் என்றால் என்ன என்று காஞ்சிபுரத்தில் இருப்பவர்களுக்கு, அதிலும் அதில் நெருங்கிய தொடர்புள்ளவர்களுக்கு மட்டும்தான் அதன் இரகசியம் தெரியும். அதுபோல் அலகாபாத் பண்டிதருக்குமற்றவர்களைவிடக் கும்பமேளா முழுக்குப்பற்றிய விவரம் அதிகமாகத் தெரியும். எனவேதான், அவர்—பண்டிதநேரு, 144-ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனும், சந்திரனும், குருவும் ஒன்று சேருகின்ற புனிதநாளாய் இருந்தும்—மௌனி அமாவாசையாக இருந்தும், புண்ய நதியாக இருந்தும்; அன்று அந்த நதியில் முழுகவில்லை.

தற்செயலாக இங்கிலாந்திலிருந்து மவுண்ட்பேட்டன் பிரபுவோ, அல்லது அவரது மனைவியோ, மகளோ இங்கு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் நேருவைப் பார்த்து நீங்கள் கும்ப மேளாவின் போது கங்கையில் குளிக்கவில்லை— அந்த ஆசையை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டீர்கள் என்று பத்திரிகைகளில் படித்தோம்; உங்களை நேரில் சந்திக்கும் போது அதன் விபரத்தைக் கேட்க வேண்டுமென்றிருந்தோம்'' என்று கூறி விளக்கம் கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்குப் பண்டிதர் என்ன பதில் கூறுவார்? "ஏதோ பழங்காலத்திலிருந்து நடைபெற்றுவரும் ஒரு வைதிகப் பழக்கம். விஞ்ஞான முறைக்கும் பொது அறிவுக்கும் ஒவ்வாததென்ற போதிலும், மதவிவகாரங்களில் அரசியல் ஆதிக்கம் செலுத்தக்கூடாதென்ற சட்டத்தை மதவாதிகள் தங்கள் மெஜாரிட்டியால் உண்டாக்கி வைத்திருப்பதற்கு ஒத்துப் போகவேண்டியிருப்பதால், இத்தகைய விழாக்களின் பேரால் எவ்வளவு கொடுமைகள் நடந்தாலும், அவற்றிற்கு ஏதாவது காரணங்கள் கூறி, அவை தொடர்ந்து நடைபெறச் சர்க்கார் பாதுகாப்பளிப்பது மட்டுமல்லாமல், பண உதவியும் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது'' என்ற விளக்கத்தை கூறி, "நான் வைதிகத்தில் சிக்கிச் சீரழிவதுமில்லை, அதை விட்டுக்கொடுப்பதுமில்லை, என்ற உண்மைதான் என் அத்யந்த நண்பர்களான உங்களுக்கு நன்றாகத் தெரியுமே'' என்ற பதிலையும் கூறிவிடுவார். அவர்களும் பண்டிதரைப் பார்த்து ஒரு புன்முறுவலைச் சிந்திவிட்டு, "உங்கள் ராஷ்டிரபதி கூடக் குடும்பசகிதமாகப் புனித முழுக்குப் போட்டார்களாமே'' என்று குத்தலாக, ஆனால் அந்த அலகாபாத் அழகன் புரிந்து கொள்ள முடியாதபடி சாமர்த்தியமாகக் கேட்டால், அதற்கும் அவர் மிக எளிதாகப் பதில் கூறிவிடுவார். "உங்கள் நாட்டில் எலிசபெத் ராணி போல் எங்கள் நாட்டில் ராஜேந்திர பிரசாத், நீட்டிய ஓலையில் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுவதோடு சரி. அந்த அளவுக்குத்தான் அவரை நாம் அரசியலில் பயன்படுத்திக்கொள்கிறோம். இதெல்லாம் நீங்கள் (பிரிட்டிஷார்) கற்றுத்தந்த பாடம்தானே'' என்று விளக்கம் கூறிவிட்டு, ராஜேந்திரபிரசாத் என்றால், ஒன்றும் பிரமித்துப்போக வேண்டியதில்லை. அவரும் மதத்துறையில் சாதாரண பக்தர்குழாங்களில் ஒருவர்தான்—அப்படிப்பட்ட அவர் கங்கையில் குளித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை அண்மையில் காசியில் கர்மடவா (பிராமணர்கள்) இருவரை வெள்ளி மணையில் உட்கார வைத்து பாத பூஜைசெய்தார் இவ்வுபகண்டத்து ராஷ்டிரபதி என்ற உண்மையைத்தான் நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே! அப்படியிருக்க இதுபோன்ற கேள்விகளைக் கேட்பது, வேண்டுமென்றே என்னைக் கேலிசெய்வது போல் இருக்கிறது'' என்று தெளிவுரை கூறித் தம்முடைய வாடிய முகத்தை அவர்கள் பக்கம் திருப்பினால், அவர்களும் அளவுக்குமீறி நமது அன்பரைக் கிண்டல் செய்து விட்டோம் என்பதற்காக வருத்தம் தெரிவித்துவிட்டு வேறு சொந்த விவகாரங்களைப் பேசிவிட்டுப் போய்விடுவார்கள்.

*

பண்டித நேருவுக்குப் பெருமை தரக்கூடிய சம்பவம் இது என்று எண்ணிக்கொண்டு பாம்பே!! எடொன்று, பண்டிதரின் வருகை அறிந்து ஆனந்தக் கடலில் மூழ்கிய யாத்ரீகர்கள், அந்தக் கடலின் கரையைக் காணமுடியாமல் அங்குமிங்குமாக ஓடியோடியதால் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இறக்கவும் காயப்படவும் காரணமாயிற்று என்ற

வெட்கக்கேடு!

தமது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பிரசாரம் செய்ய கும்பமேளாவுக்குத் தன்னுடைய அதிகாரிகளை அனுப்பிற்றும், இந்திய சர்க்கார். அங்கு போய், என்ன பிரச்சாரம் செய்தனரோ?

செய்தியைப் பிரசுரித்தது, உண்மையிலேயே அவருக்கு இழுக்கையே உண்டாக்கிவிட்டது. கும்பமேளாக் கொடுமைகளை மிகைப்படுத்திக்கூற வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுமளவுக்கு அவர் தன்னை எவ்வளவோ தாழ்த்திக்கொண்டார் என்பதை எண்ணும்போது நமக்கே பரிதாபமாகத்தான் இருக்கிறது.

* * *

கங்கைக்கரையில் அலங்கோலமாகச் சிதறிக்கிடந்தனவாம் பிணங்கள்.

மிதிபட்டு இறந்தவர்களில்பெரும்பாலோர் பெண்களாம்.

துணிகளும், நகைகளும் பிற பொருள்களும் ஆங்காங்கு சிதறிக் கிடந்தனவாம்.

தாயின் இடுப்புடன் ஒட்டிக்கொண்டு குழந்தை இறந்து கிடந்ததாம்.

அம்மாவையும் பாட்டியையும் கட்டிக்கொண்ட பெண்கள், பிள்ளைகளின் சடலங்கள் குவியல் குவியலாகக் கிடந்தனவாம்.

இவ்வளவு கொடுமைக்கும் காரணம் பண்டித நேருவின் விஜயம்தான் என்று சொன்னால், அது, வருந்தக்கூடிய விஷயமென்று விட்டுவிடாமல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதென்றே எவரும் கூறுவர். ஆனால், உண்மை அதுவல்ல. பண்டிதர் அங்கு சென்றதற்கும் மக்கள் நெரிசலில் அகப்பட்டு மடிந்ததற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

கும்பமேளாவுக்கு வந்திருந்த நாக சாதுக்களின் ஊர்வலம்தான் இந்தக் கொடுமைக்குக் காரணம் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

"நாக சாதுக்கள் ஊர்வலமாகச் சென்றபோது, சில பெண்கள் அவர்களது பாததூளிகளை எடுத்துக்கொள்ளக் குனிந்தார்கள். யாராவது கிட்ட வந்தால் கொலையாவார்கள் என்று சாதுக்கள் மிரட்டினர். இதைக் கேளாமல் சில பெண்கள் குனியவே, கூட்டம் மேல்விழுந்து நெரிசலை உண்டாக்கிப் பலர் மிதிபட நேர்ந்தது"

என்ற உண்மையை ஒரு நிருபர் பண்டித நேருவிடமே கூறியிருக்கிறார்.

நாக சாதுக்களின் பாததூளியை எடுக்கப் பெண்கள் முனைந்திருக்கிறார்கள். பாததூளி என்றால், பாதம் பட்ட இடத்தில் கிடைக்கும் மண். இந்த மண்ணை எடுக்கப் பெண்கள் ஓடியிருக்கிறார்கள். ஏன் இந்த மண்? அதிலும், பெண்களுக்கு அந்த மண் எதற்காக? அந்த மண்ணை அவர்கள் எடுத்து என்ன செய்வார்கள்? அந்த மண்ணின் மகத்துவம் தெரியாமலா அந்தப் பெண்கள் அப்படி விழுந்தடித்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள்! அந்த மண்ணில் மறைந்திருக்கும் மகத்துவம்தான் என்ன? அந்த மண்ணில் மகத்துவம் இருப்பதாக யார் அந்தப் பெண்களுக்குச் சொல்லித் தந்தது?

ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களையும், பெண்களையும் குழந்தைகளையும் மண்ணோடு மண்ணாக்கிய அந்த மண்ணின் பெருமை மிகப் பெரிதுபோலும்!

அந்த மண்ணின் மகத்துவத்தை மங்கையர்க்கு உபதேசித்த மதகுரு யார்? அல்லது மதநூல் எது?

(13-ம் பக்கம் பார்க்க)

எர்னஸ்ட் ஹெமிங்வே

[பூ. சோ. கணேசன்]

ஐம்பத்தைந்து வயதும், ஆறடி உயரமும், இருநூறு பவுண்டு எடையுமுள்ள ஹெமிங்வே 1899ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் நாள் அமெரிக்காவிலுள்ள இல்லினோயிஸ் பார்க் என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய தகப்பனார் பெயர் கிளாரன்ஸ் எட்மண்ட் ஹெமிங்வே என்பது. தாயாரின்பெயர் கிரேஸ்ஹால். எர்னஸ்ட் ஹெமிங்வே எந்தப் பள்ளிக்கூடத்திலும் முறையாகக் கல்வி பயிலவில்லை. பர்னாட்ஷா, இங்கர்சால் போன்ற அறிவுலக மேதைகளைப்போலவே, இவருக்கும் கல்லூரிப்பட்டம் எதும் கிடையாது. கட்டுப்பாடற்ற காடுமுரடான வாழ்க்கை இவரை அதிகமாகச் சிந்திக்கத் தூண்டியது. உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் கால்பந்து விளையாடுவதிலும், குத்துச் சண்டை பழகுவதிலும், பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவதிலும் அதிக கவனம் செலுத்தினார். சிறுவயதிலேயே வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தை தொழிலாளியாகக் கூலிவேலை செய்வதன் மூலம் சம்பாதித்துக்கொண்டார். தகப்பனார் தன்னுடைய தொழிலான வைத்தியத் தொழிலையே பிள்ளை மேற்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார். தாயாரோ சங்கீதத்துறையில் மகன் பேரும் புகழும் பெற்றுப் பெருமை பெற வேண்டுமென்று நினைத்தார். எழுத்துப் பைத்தியம் பிடித்திருந்த ஹெமிங்வேயின் விருப்பமோ வேறு விதமாக இருந்தது! 'கன்ஸாஸ்சிட்டி ஸ்டார்' (Kansas City Star) என்ற பத்திரிகையில் நிருபராக தன் பெயரைப் பதிவு செய்துகொண்டார். ஆங்கில இலக்கியம், அறிவுச் சிற்பி ஒருவரை அதன் பட்டியலில் சேர்த்துக்கொண்டது.

முதல் உலகப் பெரும்போரின் போது அறிஞர் ஹெமிங்வே ஆம்புலன்ஸ் படையில் சேர்ந்து இத்தாலியில் அரும்பணி ஆற்றினார். அது சமயம் அவர் படுகாயமடைந்தார். என்றபோதிலும் உயிர்பிழைத்தார்! அவருடைய சேவையைப் பாராட்டி இத்தாலிய சர்க்கார் இரண்டு ராணுவப்பதக்கங்களையளித்து பெருமைப்படுத்தியது. படையிலிருந்து நீங்கி பாரிஸ்நகரில் அவர் வந்து வசிக்க ஆரம்பித்தபொழுது அவருடைய சொத்தாக இருந்தது. பத்திரிகைகளுக்கு அவர் எழுதிய சில கட்டுரைகள்தான்!

நாவல் எழுதுவதில் தனக்கென

ஒரு முறை வகுத்துக்கொண்டு ஆங்கில எழுத்துத் துறையில் ஈடு இணையற்ற நாவலாசிரியர்களில் ஒருவராக மதிக்கப்படும் ஹெமிங்வே, கவிதை எழுதுகின்றவராகவும், சிறுகதை எழுத்தாளராகவுமே முதன் முதல் உலகுக்கு அறிமுகமானார். 'மூன்று கதைகளும் பத்து கவிதைகளும்' என்ற தலைப்பில் அவரது கதைகளும் கவிதைகளும் முதன் முறையாகப் புத்தகவடிவில் 1921-ம் ஆண்டு வெளியிடப்பட்டன. இந்த நூல் அவரை ஒரு எழுத்தாளர் என மட்டுமே அறிமுகம் செய்தது; அவ்வளவுதான்! அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, 'நமது காலத்தில்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட சிறு கதைத்தொகுதி, அறிவுக் கருவூலங்களான தன்னுடைய சிறு கதைகளால் அலங்கரிக்க வந்திருக்கும் இலக்கிய மேதை ஹெமிங்வே என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்தது. இந்த நூலில், புத்திசாலிகளாக வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் உலகில் கிடந்து உழலும் பொழுது எப்படிக் குதர்க்கவாதிகளாக மாறுகிறார்கள் என்பதையும், 'காட்டுமிராண்டிகள்' என்றும் 'நாகரிகமற்றவர்' என்றும் கருதப்படும் பிற்போக்கான பிரதேசங்களில் வாழும் மக்களிடம் காணப்படும் கண்ணியமும் நாணயமும் நாகரிக மக்களெனக் கருதப்படுபவர்களிடம் இல்லாதிருப்பதைச் சுட்டிக்காட்டி, உணர்ச்சியைப் பின்னணியாக்கி, கதாபாத்திரங்களின் சுருக்கமான உரையாடல்கள் மூலம் நறுக்கு தறித்தாற்போல் தீட்டிக்காட்டும் ஹெமிங்வேயின் கலைத்திறன் இலக்கிய அரங்கில் அழியாத ஒரு இடத்தை அவருக்குக் கொடுத்துவிட்டது. ஹெமிங்வே ஏராளமான நாவல்களை எழுதிக் குவித்திருந்த போதிலும் 'சூரியனும் உதிக்கிறான்' (The Sun Also Rises) என்ற நாவல்தான் அவரை எழுத்துக் கலைஞராக்கி, அவர் நடையைப் பின்பற்றி எழுதும்படி பல இளம் எழுத்தாளர்களைத் தூண்டிவிட்டது. இதுவரையில் வெறும் நாவலாசிரியராக மட்டுமேயிருந்த ஹெமிங்வேயைச் சுற்றி அவர் கருத்தையும் எழுத்தையும் பின்பற்றுகின்ற எழுத்தாளர் குழாம் (Hemingway School) ஒன்று அமைந்ததோடு, அவர் ஒரு ஸ்தாபனமாகவே (Institution) மாறிவிட்டார். இளம் எழுத்தாளர்கள் எழுத்து நடையில் மட்டுமல்ல, உடை உடுத்துவதிலும், உரையாடல் நிகழ்த்துவதிலும், ஏன், ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் கூட அறிஞர் ஹெமிங்வேயின் பாணியைக் காப்பியடிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் அதிகம் சொல்வானேன்?

காதல் தத்துவத்திற்குப் புதிய விமர்சனம் செய்யும் 'போர்க்கருவிகளுக்கு இறுதி வணக்கம்' (Farewell to Arms) என்ற நாவலும், 'எவருக்காக மணி ஒலிக்கிறதோ' (For whom The Bell Tolls) என்ற யுத்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலும் அவர் பேனாவின் பெரும் சாதனைகளாகும். 1950-ல் அவர் எழுதிய நாவல் 'நதியைத் தாண்டி, மரங்களினூடே' (Across The River Into The Trees) அவர் புகழுக்கு ஊறு விளைவித்து விடுமோ என்று அவருடைய 'பக்தர்'கள், பயந்தனர். ஆனால், 1952ல் அவர் எழுதிய 'வயோதிகனும் கடலும்' (The Old Man And The Sea) என்ற நாவல் மிக உயர்ந்த இலக்கிய பரிசான 'புலிட்ஸர் பரிசைப் (Pulitzer prize) பெற்றது. ஹெமிங்வேயே சொல்லுகிறார்:- இருபது வயதைத் தாண்டிய பொழுது 'எழுத்தாளன்' என்று பட்டம் பெற்றேன். முப்பது, நாற்பது வயதுகளில் அரும்பாடுபட்டு அதைக் காப்பாற்றி விட்டேன். ஐம்பதாவது பிராயத்தைத் தாண்டுகின்ற இப்பொழுதும் அந்தப் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதில் நான் அலட்சியமாக இருக்கப்போவதில்லை!"

கற்பனைக் கதைகள் புனைகின்ற முறையில் ஒரு புதிய சகாப்தத்துக்குக் கால்கோல் விழா நடத்தியவர் ஹெமிங்வே. அவர் எழுத்துக்கள் இலக்கியச் சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்படாதவை. நாகரிகப் போர்வையில் நடக்கும் காட்டுமிராண்டிச் செயல்களை அவர் கதைகளில் அம்பலப்படுத்துகிறார். போலிகளின் முகமூடிகளைக் கிழித்தெறிகிறார். மனித வாழ்க்கையின் மாற்றமுடியாத உண்மையான மரணத்தைக் கண்டு பயந்து, கொள்கைகளையும் இலட்சியங்களையும் உலகச் சந்தையில் விலை கூறிடும் கோமாளிகளைப் பல இடங்களில் கேலி செய்கிறார். உண்மையை ஒளிவு மறைவின்றி இலக்கியச்சுவையோடு கூறுகின்ற காரணத்தினால் அவர் நூல்கள் மக்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்து விட்டன. 'எவருக்காக மணி ஒலிக்கிறதோ' என்ற அவருடைய நாவல் பத்து லட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகி இருக்கிறது, ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர் கொடுத்து அக்கதையைப் படமாக்கும் உரிமையை ஒரு படக்கம்பெனியார் பெற்றுள்ளனர். 'கிலிமாஞ்சரோப்பனி' (The Snow of Kilimanjaro) என்ற அவருடைய சிறுகதையைப் படமாக்க ஹாலிவுட் அவருக்கு ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் டாலர் வழங்கியிருக்கிறது! இதுவரையில் எந்தச் சிறுகதையும் இவ்வளவு பெரும் தொகையை விலையாகப் பெற்றது கிடையாது!!

அறிஞர் ஹெமிங்வே க்யூபாவில் உள்ள அவரது மாளிகையில் குடும்பத்தோடு வசித்து வருகிறார். அவருக்கு நான்கு முறை திருமணமாகி இருக்கிறது! மாளிகையின் திறந்த மேன்மாடியில் உட்கார்ந்துதான் அவர் சிந்திப்பதும் எழுதுவதும். அதிகாலையிலேயே எழுந்து நாளெல்லாம் படிப்பதிலும், எழுதுவதிலும், மீன் பிடிப்பதிலும் செலவிடுகிறார். சமீபத்தில் அவர் கிழக்கு ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்கு சுதேசிகள் நடத்திவரும் "மாவ் மாவ்" (Mau Mau) இயக்கத்தைப் பற்றி நேரில் கண்டறிந்திருக்கிறார். அங்கிருந்து சில தினங்களுக்கு முன் க்யூபாவிற்கு அவர் திரும்பி வரும் போதுதான் இருமுறை விமான விபத்துக்குள்ளாகி தப்பியிருக்கிறார். அவரை நிருபர்கள் சந்தித்து கேட்டபொழுது, கென்யாவில நடக்கும் 'மாவ் மாவ்' இயக்கத்தை அடிப்படையாகக்கொண்டு நாவல் எழுதும் உத்தேசமில்லையென்றும், அந்த இயக்கம்பற்றி அமெரிக்கப் பத்திரிகையொன்றில் கட்டுரை மட்டும் எழுதப்போவதாகவும், க்யூபா போய்ச் சேர்ந்தவுடன் புதிய நாவல் ஒன்றை உலகுக்குத் தரப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ✲

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பமேளாக் கோரக் கொடுமையை விசாரிக்க ஒரு கமிட்டியை சர்க்கார் நியமித்திருக்கிறதாம். நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி விசாரணை நடாத்திச் சாதிக்கப்போவதென்ன என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

இந்தக் கமிட்டி, யார் யாரால் இன்னின்னார் கொல்லப்பட்டனர் என்ற புள்ளி விபரத்தைக் கண்டு பிடித்து, அவரவர்களுக்கும் தக்க தண்டனை தரப்படவேண்டுமென்ற யோசனையைச் சர்க்காருக்குச் சொல்லுமா என்பது சந்தேகம்தான். அப்படிச் சொன்னால், பலபேர் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட நேரிடும்.

முதலில், ஈட்டிகளாலும், வேல்களாலும் யாத்ரீகர்களைத் தாக்கிய நாகசாதுக்கள் கூண்டில் ஏற்றப்படுவர். அடுதப்படியாக அந்தச் சாதுக்கள் கூட்டத்துக்குத் தலைமை வகித்துச் சென்ற மகந்துக்கள் குற்றஞ்சாட்டப்படுவர், இதோ அவர்களின் பெயரும் விலாசமும்:—

1. மகாநிர்வாண அகாராத் தலைவர் மகந்த் ஓங்கூர்புரி

2. நிரஞ்சனி, ஜீனு அகாராத் தலைவர்கள் மகந்த மகாதேவ்பூரி, மகந்தத் ஜஜர்புரி ஆகியவர்கள்

வைகனியைச்சேர்ந்தசாதுக்கள். இவர்கள் மூன்று பிரிவினர்—நிர்மோகி, திகம்பர், நிர்வாணி.

3. நிர்மோகிச் சாதுக்களின் தலைவர் மகந்த் ராம்லகன்தாஸ், மகந்த் நிர்மல்தாஸ்.

4. திகம்பர் சாதுக்களின் தலைவர் ராம்துலாரிதாஸ், பண்டிட் மோகன்தாஸ் ஆகியோர்.

5. நிர்வாண சாதுக்கள் தலைவர் மகந்த் ராம்கிலவன்தாஸ்

6. நிர்மல சாதுக்களின் தலைவர் மகந்த் ஹரிசுச்சா சிங்ஜி

மேலே குறிப்பிட்டுள்ள ஆறு சன்னியாசத் தலைவர்களும் ஈட்டி, வேல் ஆகியவற்றால் விளையாடிய நிர்வாணச் சாதுக்களும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டுத் தக்க தண்டனை ஏற்கநேரிடும். ஆனால், அந்தக் கமிட்டி இதனைச் செய்யுமா? ஒருபோதும் செய்யாது என்பதுஎன்னவோமறுக்கமுடியாத உண்மைதான். இந்த நிலைமையில் அந்த மண்ணின் மகத்துவம் பற்றிய விபரங்களைக் கமிட்டி ஆராய்ந்து முடிவுசெய்யுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? என்றபோதிலும், அந்த மண் எடுக்கப் போனதால் ஏற்பட்டதே இந்தக் கும்பமேளாக் கோரச் சம்பவம் என்பதை அந்தக் கமிட்டிமட்டுமல்ல, எவருமே மறுக்கமுடியாது.

*

பற்பல பிரிவுகளாகச் சென்ற சாதுக்களின் ஊர்வலம், யானைகள், ஒட்டகங்கள், பல்லக்குகள், கார்கள் முதலியனவற்றால் சிறப்பிக்கப்பட்டு பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததாம். ஊர்வலத்தில் சென்றவர்களில் பெரும்பாலோர் நாக சாதுக்களாம்! அவதூதனிகள் என்று அழைக்கப்படும் பெண் நிர்வாண சாதுக்களும் ஊர்வலத்தில் சென்றனராம்.

"The processions included a large number of unclad Nagas. There were also Nuns known as abadhutanis"

அதாவது "ஆடை எதுவும் இல்லாத நிர்வாண சாதுக்கள் பெரும் அளவிலும், அவதூதனிகள் என்று அழைக்கப்படும் பெண் நிர்வாண சந்நியாசினிகளும் ஊர்வலத்தில் இருந்தனர்" என்று கூறப்படுகிறது.

Unclad Nagas — என்றால் ஆடை அணியாத சாதுக்கள் என்று பொருள். அவர்களோடு அவதூதனி என்றழைக்கப்படும் பெண் துறவிகள்! இவர்களைப் பார்க்க இலட்சக்கணக்கான மக்கள் கூட்டம்! இதற்கு மாகாண சர்க்கார் செய்து கொடுத்திருக்கும் ஏற்பாடு மிகப் பிரமாதம்! கல்யாணிக் காங்கிரசுக்குப் போகிற அவசரத்திலும் இந்த ஏற்பாட்டைப் பார்க்க வந்த பண்டித நேருவின் புகழ்மாலை அதைவிடப் பிரமாதம்!!

இந்த ஏற்பாட்டின் பயனை இறந்தவர்களின் தொகை ஆயிரத்துக்கு மேல்!

காயம்பட்டவர்களுக்குக் கணக்கில்லை!

இழந்த பொருள்கள் ஏராளம்! பக்தகோடிகளை ஏற்றிவந்த படகுகள் பல கவிழ்ந்துவிட்டன!

சந்நியாசிகள் கூட்டம் ஒன்றுக்குச் சொந்தமான யானைக்கு மதம் பிடித்து ஓடியதன் விளைவாகப் பலர் காயமடைந்தனர்!

பக்தகோடிகளைஏற்றிச்சென்றபஸ் ஒன்று கவிழ்ந்து 27 பேர் மரணம்! பலருக்குக் காயம்! இன்னும் இது போன்ற கோர நிகழ்ச்சிகள் —பத்திரிகைகளுக்கு வராதவை! வராமல் தடுக்கப்பட்டவை ஏராளம்!!

இத்தனையும் இந்திய கலாச்சாரப் பண்புக்கு ஒரு எடுத்துக் காட்டாம்! செப்புகிறார் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத்.

*

நாக சாதுக்கள் என்று அழைக்கப்படும் நிர்வாண சாதுக்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். 1928ல் அலகாபாத்தில் நடைபெற்ற இதே கும்பமேளாவுக்கு நானும் சென்றிருந்தேன்.

நாக சாதுக்கள் என்று அழைக்கப்படும் இந்த ஆடையில்லா மனித வடிவங்கள், பார்ப்பதற்கே பயங்கரமாகக் காட்சியளிக்கும். ஒவ்வொன்றின் எடையும், குறைந்தது 350 லிருந்து 400 பவுண்ட்வரை இருக்கும். கிங்காங்போன்ற பயில்வான்களையே தோற்கடிக்கக்கூடிய உடலமைப்போடு கூடிய இதுகள், ஆடை எதுவுமின்றி அணிவகுத்துச் செல்லும் அலங்கோலக் காட்சியைக் கும்பமேளாவின்போதுதான் நேரில் பார்த்திருக்கிறேன். இதுகளின் மத்தியில் ஆடையில்லா அணங்குகளும் உண்டு. அவதூதனி என்ற அகாராவைச் சேர்ந்த இந்த நிர்வாணப் பெண் துறவிகள் பல வட இந்தியாவில் இருக்கின்றன. இதுகளுக்கெனத் தனி ஆசிரமமும் நிறையச் சொத்துக்களும் உண்டு பிரயாகை, அரித்துவாரம், நாசிக் உஜ்ஜினி ஆகிய இடங்களில் நடைபெறும் மேளாக்களில் இதுகளைத் தரிசிக்கலாம்—தரிசிப்பதற்காகவே பலர் அந்த இடங்களுக்குத் தவறாமல் செல்லுகின்றனர். ஆண் நாகசாதுக்களைப் போலவே இந்தப் பெண் துறவிகளுக்கும் உடலமைப்பில் உறுதி உண்டு.

நம் நாட்டுப் பண்டாரச் சந்நிதிகளுக்கு இருப்பது போன்ற எல்லா விதமான வசதிகளும் இந்த நாக சாதுக்களுக்கும் உண்டு. யானை

குதிரை, ஒட்டகம், பல்லக்கு, கார் முதலான பரிவாரங்களுடன்தான் இவர்கள் பவனி வருவது வழக்கம். இலட்சக்கணக்கான சொத்துக்குச் சொந்தக்காரர்களாக விளங்கும் இந்த நாக சாதுக்கள் ஆடை மட்டும் அணிவதில்லை. ஆனால்: நாளொன்றுக்கு ரூபா பத்துக்குமேல் மதிப்பிடக்கூடிய ஆகாரத்தை மட்டும் இதுகள் தயவு தாட்சண்யமின்றி உள்ளே தள்ளத் தயங்குவதில்லை. நெய்க்கலப்பற்ற தீனிகளை இவர்கள் எப்போதுமே உண்பதில்லை. கோதுமை, நெய், சர்க்கரை—பால் —இவை நான்கும்தான் இவர்களின் முக்கிய உணவாகும். இப்படிப் பெருந்தீனி தின்பதால் முறுக்கேற்பட்ட உடம்பில் தாடியும், சடையும், பிறவும் தன்னிஷ்டம் போல் வளர்ந்து காணப்பட்டால் பார்ப்பதற்கு எப்படியிருக்கும்? இந்த அரும் பெரும் காட்சியைக் காணப் பக்த கோடிகள் பல இலட்சக் கணக்கில் கூடுவதில் ஆச்சரியம் தான் என்ன இருக்க முடியும்! அதிலும் அமுதகலசத்தில் இருந்து ஒழுகிய ஒரு துளி அமிர்தத்தால் மகத்துவம் பெற்ற பிரயாகை போன்ற புண்ய ஸ்தலத்தில — கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் ஒன்றாகச் சந்திக்கும் திவ்ய ஷேத்ரத்தில் இத்தகைய கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதென்றால், சாமான்யமானவர்களால்—பாபாத்மாக்களால் முடியக் கூடிய காரியமா என்ன! சுமார் 35-கோடிமக்களில் கேவலம் 40, 50 இலட்சம் பேர்தான் அந்தக்காட்சியைக் காணமுடிந்ததென்றால், கணக்கிட்டுப் பாருங்களேன் இந்த நாட்டிலுள்ள பாபிகளின் தொகை எவ்வளவென்பதை!

பிறந்த மேனியோடு குழந்தைகளைத்தான் பார்க்கிறோம் — வீடுகளில். ஆனால், இருபதிலிருந்து எண்பது வயதுவரை ஓங்கிவளர்ந்து பிறந்த மேனியோடு காட்சியளிக்கும் பெரியவர்களைப் பெண்கள் உட்பட ஆயிரக் கணக்கில் கங்கா பாத்போன்ற அருள் ததும்பும் இடங்களில்தான் பார்த்துக் களித்துப் பரவசமடைய முடிகிறது — பக்தகோடிகளால். பக்தகோடிகள் மட்டுமென்ன! மனித சுபாவத்துக்குப் புறம்பான எவருமேதான் இந்தக் கண்றாவிக் காட்சியைப் பார்த்து ரசிக்கத் தவறமாட்டார்கள்.

மகா மேரு மலையை மத்தாகவும், ஆதிசேஷனைக் கயிறாகவும் கொண்டு அசுரர்களும் தேவர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது, முதலில் கிடைத்த ஆலகால விஷத்தைப் பரமசிவம் ஏந்தித் தன் கண்டத்தில் நிறுத்திக்கொண்டு நீலகண்டனானென்றும்; பிறகு காமதேனுவும், ஐராவதமும், கற்பகவிருட்சமும், லட்சுமியும் தோன்றினார்களென்றும்; கடைசியில் அமுதக் கலசமேந்தி, தன்வந்திரி தோன்றினானென்றும் புராணத்தில் படிக்கிறோமல்லவா?

அப்படிக் கிடைத்த அமுதத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவதில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் சண்டை நடைபெற்றபோது, அமுதக் கலசத்திலிருந்து சில துளிகள் கீழே சிந்தி, பன்னிரண்டு இடங்களில் விழுந்தனவாம்! உலகின் பல பாகங்களில் விழுந்த அத்துளிகளில் நான்கே நான்குமட்டும், ஹரித்துவாரம்—பிரயாகை – உஜ்ஜயினி—நாசிக் ஆகிய இடங்களில் சிந்திற்றாம்!! எனவே, இந்த நான்கு இடங்களிலும் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, ஒன்றுவிட்டு ஒன்றாக 'கும்பமேளாக்கள்' நடந்துகொண்டு இருக்குமாம். 'அமுதக் கலசம்' என்பதைக் குறிப்பதே 'கும்பம்' என்பது.

*

இந்த கும்பமேளாவில், பிரயாகையில் நடப்பது விசேஷ பிரசித்தி பெற்றதற்கு முக்கிய காரணம், அங்கே யமுனை — கங்கை — சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்று சேருகின்றன.

இந்தக் கும்பமேளா யார் காலத்தில் ஆரம்பமாயிற்று? என்பதைச் சரியாக வரையறுத்துக் கூறமுடியவில்லை. ஆனால், இந்த விழாவை நம்பி வீணான ஒரு மன்னனைப் பற்றிக் குறிப்பொன்றுமட்டும் இருக்கிறது. ஹர்ஷன் தன்னுடைய ஆட்சிக் காலத்தில், ஆறு தடவைகள், இந்த விழாவுக்குச் சென்றானும்—அங்கே போய்த் தன்னிடமிருந்த செல்வத்தையெல்லாம், பண்டாரங்களுக்கும், பக்கிரிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தானாம். கடைசியாக கி. மு. 644ல் சென்றபோது, எல்லாவற்றையும் தானம் செய்துவிட்டே, தனக்கு உடுக்கத் துணியுமில்லாமல் பிச்சை யெடுத்தானாம்!

இந்தக்கும்பமேளாவில் மொட்டையடித்துக் கொள்வது முக்கியமான விஷயமாம். 'பிரயாகை மகாத்மியப்படி' இப்படி மொட்டையடிக்கப்பட்டு ஆற்றில் விடப்படும் ஒவ்வொரு மயிரும், பதினாயிரம் பிறப்பிலிருந்து, அந்த மயிரையுடைய மனிதனுக்கு விடுதலை வாங்கித் தருமாம்!

இத்தகு நற்பணிக்காகச் சர்க்காரும், பணம் படைத்தவர்களும், பொதுமக்களும் தரும் (பொருள்) காணிக்கையைக் கணக்கிட்டால் கணக்கில் அது அடங்காது.

இதோ பாருங்கள், இவர் ஒரு பால சந்நியாசியார்! இவருடைய வயது ஐந்தேதானாம். இவர் தபத்தில் இருக்கிறாராம்! பாருங்கள் இவர் முன்னால் குவிந்து கிடக்கும் காணிக்கையை! ஐந்தாண்டுப் பாலகன் அருந்தவம் புரிகிறான் — இதுவும் ஆண்டவன் அருள் தான் என்று ஆனந்தக் கடலில் விழுந்த பக்தர்கள் அள்ளித் தரும் காணிக்கைக் குவியலைக் கவனியுங்கள். இந்தப் பால யோகியின் இந்த வடிவம் இப்

பொழுது நடைபெற்ற கும்பமேளாவில் தவம் செய்துகொண்டிருந்த போது புகைப்படமாக எடுக்கப்பட்டதாகும்.

*

இந்த நாகசாதுக்களில் பலர் நிரந்தரமானவர்களல்ல. பிரயாகை மேளாவில் காட்சியளித்த பெருந்தொகை நாக சாதுக்களில் ஒருசிலர் தான் வடஇந்தியாவிலுள்ள நிர்வாண அகாராவைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் எல்லோரும் சமயோசித நிர்வாண சாமிகள். அதாவது நிர்வாண சாமியார்களின் ஊர்வலத்தின்போதுமட்டும் ஆடைகளை அகற்றி நிர்வாணக் கோலம்பூண்டுவிட்டுப் பின்னர் மனித வடிவத்தில் காட்சியளிப்பவர்கள். இதை நான் பொய்யாகவோ புனைந்துரையாகவோ கூறவில்லை. நான் பிரயாகை மேளாவுக்குச் சென்றிருந்தபோது என்னுடன் சுந்தரகிரி என்ற சந்நியாசி ஒருவரும் வந்திருந்தார். அவர் எனக்குத் தெரிந்தவர். நண்பராக இல்லாவிட்டாலும் நன்றாக அறிமுகமானவர். என்னுடைய ஊர்க்காரர் (ஈழத்தவர்) இப்பொழுது சென்னையை அடுத்த திருவொற்றியூரில், பக்தர்களின் உதவியால் ஒரு ஆசிரமம் அமைத்துக்கொண்டு அமைதியாகக் காலம் கழித்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுதுகூடச் சென்னைக்குப் போகும் சமயங்களில் எதிர்பாராத விதமாக அவரை நான் சந்திப்பதும் நலம் உசாவுவதும் உண்டு—மிகவும் நல்லவர். இவரும் நானும் பிரியாகையில் ஒரே இடத்தில்தான் தங்கியிருந்தோம். பிரயாகை மேளாவில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் நானும் அவரும் ஒன்றாகத்தான் போவது வழக்கம். சில சமயங்களில் நான் அவருடைய சிஷ்யனாகவும் நடித்ததுண்டு. சுந்தரகிரி தாடியும் சடையுமாக (என்னைப் போலில்லாமல்) நல்ல கெம்பீரத் தோற்றமுடையவர். பொன்னிறக் காவியணிந்து பொலிவுடன் விளங்கும் இவரை அங்குள்ள பெரிய அகாராக்களை (மடங்களை)ச் சேர்ந்த சாதுக்கள் வரவேற்றுபசரித்துணவளிப்பர். உணவென்றால், நான் முன் கூறிய படி கோதுமையும், நெய்யும், பாலும், சர்க்கரையும் சேர்ந்த உணவாச்சே! எனக்கும் அந்த உணவை உட்கொள்ளவேண்டுமென்ற ஆசைதான், ஆனால் என்னுடைய மெலிந்து ஒட்டிப்போன உடல் தோற்றம் அதற்குப்பெரும் இடையூறளிக்கவே, எனக்கொரு யோசனை தோன்றி அந்த ஆசையையும் நிறைவேற்றிக்கொண்டேன். அதாவது, நான் ஸ்ரீஜத்சுந்தரகிரி அவர்களின் சிஷ்யன் என்று சொல்லிக்கொள்ளச் சுந்தரகிரியிடம் அனுமதிபெற்று, அகாராவுக்குள் சென்றேன் — நானும் அந்தச் சாதுக்கள் வரிசையில் உட்கார வைக்கப்பட்டு உணவும் படைக்கப்பட்டது. இதோ அந்த உணவுப் பட்டியல்:—

1. சப்பாத்தி ஆறு—ஒவ்வொன்றும் கால் அங்குலக் கனமிருக்கும்.
2. ஜாங்கிரி ஆறு-பெரிய அளவில்
3. லட்டு மூன்று—சிறிய தேங்காய் அளவில்
4. பர்ப்பி இரண்டு—ஒரு அங்குல அகலமும் மூன்று அங்குல நீளத்திலும்.
5. பங்கு — இதுகஞ்சாவும் பாலும், பழங்களும், சாதிகாய் சாதிபத்திரி, பிஸ்தா, அக்ரூட் முதலானவையும்சேர்த்துச்செய்யப்படும் ஒருவகை போதை பானம் —ஒரு கப் (கிட்டத்தட்ட கால்படி இருக்கும்)
6 சிறிதளவு பச்சரிசி சாதம், அதன்மீது பத்துக்கரண்டி. பருப்பு, அதன்மீது. மூன்று கரண்டி நெய், அதன்மீது, வீசப்படி சர்க்கரை.
7 பாதம்பருப்பு கற்கண்டு முதலியன போட்டு வற்றக் காய்ச்சிய பசும்பால்—கால்படி.
8 ஆப்பிள் சாத்துக்குடிபோன்ற பழவகைகள் — ஒவ்வொரு தினுசிலும் இரண்டு மூன்று.
9 இவ்வளவுக்கும் மேல்—முடிந்தால் ஒரு தம் கஞ்சாப் புகை (இது சில அகாராக்களில் கிடையாது.)

இந்த உணவுக் குவியலைப்பார்த்த உடனேயே எனக்குப் பிரமிப்பு ஏற்பட்டுவிட்டது. என்றாலும் ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு, அதில் ஒன்றும் இதிலொன்றுமாக எடுத்துச் சாப்பிட்டுவிட்டுத் தப்பினேன் — பிழைத்தேன் என்று வெளியே வந்துவிட்டேன். அதன்பிறகு இந்தவிதமான சந்தர்ப்பங்களில் தோழர் சுந்தரகிரியோடு போகும்போதெல்லாம்உணவருந்துவதில் மிகவும் ஜாக்ரதையாக் நடந்துகொள்வது வழக்கம். அதாவது நீர்மோர் போன்ற லேசான பானங்களைத் தவிர வேறெதனையும் சாப்பிடும் வழக்கமில்லை என்று கூறித் தப்பித்துக்கொள்வேன்.

ஒருநாள் திடீரென்று விடியற்காலம் என் அருகாமையில் படுத்திருந்த சுந்தரகிரி காணப்படவில்லை. விடிந்த பின்னர்—அன்று நிர்வாண சாதுக்களின் தீர்த்தாடனோற்சவம். அதைத் தரிசிப்பதற்கு நானும் பிற சந்நியாசிகள்—என்னுடன் இருந்தவர்கள் எல்லோரும் சென்றிருந்தோம். நிர்வாண சாமிகளின் ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் ஈட்டியும், வேலும், கோலும், சிமிட்டாவும், கட்டாரியும், மழுவும் தாங்கியவண்ணம், யானைக்கூட்டம் ஆடி அசைந்து வருவதுபோல் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வருகிறது. அதில், ஒருவர் எனக்கு அறிமுகமானவர்போல்—எங்கோ, எப்பவோ பார்த்தது போன்ற முகபாவத்தோடு வருகிறார், யோசித்து யோசித்துப் பார்க்கிறேன்—புரியவில்லை — அந்த அளவுக்கு அவர் தம்முடைய உடல்முழுவதையும் சாம்பலால் பூசி மறைத்துக்கொண்டிருந்தார்.

தீர்த்தவிழாமுடிந்து நான் எனது சகாக்களுடன் கூடாரத்துக்கு வந்த. சிறிது நேரம் பொறுத்து, சுந்தரகிரி அங்குவந்து சேர்ந்தார். 'எங்கே போயிருந்தீர்கள்' என்று கேட்டதற்கு, தான் நிர்வாண ஸ்நானம் செய்யச்சென்றதாகக் கூறினார். அப்போதுதான் நான் அந்தக் கூட்டத்தில் பார்த்த ஆசாமி 'இவர்'தான் என்று புரிந்துகொண்டு, அவருக்கும் அங்கிருந்த பிறருக்கும் விஷய விளக்கம் கூறிச் சிறிதுநேரம் சிரிப்புக்கடலில் சிக்கி 'அவதி'ப்பட்டோம்.

இந்த நிர்வாண சாதுக்கள் இவ்வளவு பெருந்தீனி தின்கிறார்களே! எப்படி இவர்கள் தங்கள் ஆசையை அடக்கிக்கொள்ள முடிகிறதென்று கேட்கத் தோன்றும் எவருக்கும். எதையும் செய்யலாம், ஆனால் சிந்தையை மட்டும் அடக்க முடியாதே என்ற தாயுமானவர் கருத்தையும் தெரிவித்து இவர்கள் எப்படித் தங்கள் ஆசையை அடக்கமுடிகிறதென்று யாருந்தான் கேட்பார்கள்.

ஆனால் அவர்கள் அதற்கும் ஒருவழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது, அவர்கள் தங்களுக்கு உண்டாகும் ஆசையை வெளியே காட்டிக்கொள்ளாதபடி கையாளும் முறையிருக்கிறதே, அதை நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். அதோ திருவொற்றியூரில் சுவாமி சுந்தரகிரி இருக்கிறார்—அவரும் என்னைப்போல் நேரில் அந்தக் காட்சியைக் கண்டவர்—அவரிடம் கேளுங்கள், உண்மையைக் கூறுவார்.

அந்த நாக சாதுக்களில் பலர், தங்களுடைய மறைவிடத்தைக் கனமான இருப்பு வளையங்கள் இரண்டு மூன்றை மாட்டிவைப்பதன் வாயிலாக தங்கள் ஆசையை அடக்கிக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆசையைத் துறந்த நிர்வாண முனி புங்கவர்களைத் தரிசிக்கத்தான்—அவர்களின் பாத தூளிகளை எடுக்கத்தான்—ஆண்களும் பெண்களும் அரசியல் தலைவர்களும் (நேரு, இராஜேந்திர பிரசாத் உட்பட) அலறி அடித்துக் கொண்டு ஓடியிருக்கின்றனர்—இதன் பயனாக ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டிருக்கிறார்கள்—மத ஓடத்தில் ஏறிய மாந்தரே! சற்றுநேரம் பகுத்தறிவு என்னும் ஓடத்தில் ஏறிச்சென்று பாருங்கள்............!

✱

அவர் செயல்!

''கம்யூனிஸ்டுகள்நம்முடையநாட்டுப் பிரச்னைகளை, இங்கிருக்கும் நிலைமைகளை வைத்துப் பரிசீலனை செய்வது கிடையாது. ரஷ்யக் கண்களைக் கொண்டே பார்க்கின்றனர் இது நல்லதா, நன்மை பயக்குமா? —அவர்களுடைய கொடியைப் பாருங்கள். அதுவும், வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுதான். இப்படித் தன்னுடைய 'தலைமை ஆபீசை' ரஷியாவிலே வைத்துக்கொண்டு, இங்கே பாடுபடுவதாகச் சொல்வது சரியா! இங்கே இருக்கும் பிரச்னைகளுக்கும் அகில உலகத்துக்கும் என்ன சம்பந்தம்? எதற்கெடுத்தாலும், அகில உலகக் கண்ணோட்டம்—அகில உலகக் கண்ணோட்டம் என்று சொல்கிறார்களே; அந்தக் கண்ணோட்டத்தின் மூலமா, நம்முடைய மக்களுக்கு நன்மை செய்துவிடமுடியும்! இங்கேயுள்ளோரை எப்படி சுகமாக வாழவைப்பது —இதுபற்றிய ஆலோசனை தேவையா? அல்லது அங்கு இருக்கிறபடி நம்முடைய அரசியலையும் நடத்துவதேன்கிற ஆலோசனை தேவையா? இதை மக்களாகிய நீங்கள்தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!''

என்று எர்ணாகுளத்தில் பேசிய பண்டித நேரு முழக்கமிட்டாராம்.

பண்டிதர் கூறிய இந்த அறவுரையை, நாட்டு வாழ்வில் அக்கறை கொண்டோர், மறுக்கமுடியாது. மாஸ்கோவில் இடியிடித்தால், மன்னார்குடியில் மழை பொழியும் என்று கூறுவதும்—நியுயார்க்கில் பட்சணம் செய்தால் நெல்லையில் வாசனை வீசும் என்று செப்புவதும், கற்பனைக்குப் பயன்படுமே தவிர, கலைக்குதவாது! இதை மறுக்கார் எவரும்

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விதமான பிரச்னைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளின் தோற்றம் ஒன்றாகக்கூட இருக்கலாம்!—ஆனால், அவைகளைச் சமாளிப்பதற்குவேண்டிய வழிகள் ஒன்றாகவே இருக்கமுடியாது. காய்ச்சல் என்பது பொது வியாதிதான்! அதனால், மலேரியா காய்ச்சல் கண்டவனுக்கு, இன்புளுயன்ஸா மருந்தையும்—டைபாய்டு கண்டவனுக்கு, நிமோனியாவுக்குச் செய்யவேண்டிய இஞ்செக்ஷனையும் செய்தால், டாக்டர், ஒன்று, சிறைக்குப் போக நேரிடும்! அல்லது பைத்தியக்கார விடுதிக்குத்தான் கொண்டு செல்லப்படுவார்!! இதுபோலவே, வறுமை எனும் பொது வியாதி உலகமெங்கும் இருக்கிறது! இந்த வியாதியைப் போக்கும் நமமும் வகையும் அறிந்து, அந்தந்த நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்ப சிகிச்சைகள் செய்தால்தான் வெற்றிபெற முடியும்.

இந்த அறவுரையை அன்பர் பண்டிதர் வழங்குகிறார்! அவர் கூறும் வார்த்தைகளில், நாட்டின்மீது அவருக்குள்ள ஆசையும்—அதனைச் சீராக்கவேண்டுமெனும் ஆர்வமும் தென்படுகிறது. நாட்டு மக்களின் நல்வாழ்வில் சிந்தை செலுத்துவோர், அகமகிழவே செய்வர்.

ஆனால், இவ்வண்ணம் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அறவுரை கூறிய இவரது நிலை என்ன? அந்தப் பகுதிதான் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. மாஸ்கோவில் இடி யிடித்தால், மன்னார்குடியில் மழை பெய்யும் என்று கூறுவதைக் கண்டிக்கிறார்! ஆனால், இவர் கூறுவதென்ன? நியுயார்க்கில் பட்சணம் செய்தால் நெல்லையில் வாசனை தரும் என்பதுதானே!

அவர்களைக் குறை கூறப் புகுந்த இவருடைய நிலை என்ன? அகில உலகப் பெருமையைப்பற்றி, வானளாவப் பேசுவதால், பயன் ஏற்பட முடியாதுதான்! ஆனால், கம்யூனிஸ்டுகள் 'அகில உலகக் கண்ணோட்டம்' செலுத்தி, இங்குள்ள அடிப்படைப் பிரச்னைகளை மறக்கின்றனரென்று குற்றம் சொல்லிவிட்டு, அதே நேரத்தில், ''ஐயோ ஜனங்களே, இந்தியாவின் புகழ் அகில உலகத்திலும் கொடிகட்டிப் பறக்கிறது; இந்தப் புகழை மறக்கலாமோ? இதற்கு இழிவு வரும்படியாக நடக்கலாமோ! நம்முடைய குறைகளைப் பொறுத்துக்கொள்ளாமல்—ஆங்காங்கே, அறப்போர்,வேலைநிறுத்தம் என்றெல்லாம் செய்கிறீர்களே! இது ஆகுமா! தகுமா?'' என்று பண்டிதர் செல்லுமிடமெல்லாம் செப்புகிறாரே, இதற்கு என்ன பெயர்?

அவர்களைப் பழிக்கிறார், இவர். ஆனால், அவர்களைவிட அதிகமாக, எது கேட்டாலும்—எந்தக் குறைகளைக் கூறினாலும், 'அகில உலக ஜோதி' யைத்தானே அழைக்கிறார், சான்றுக்கு! கம்யூனிஸ்டுகள் அழைப்பதால், இந்த நாட்டுக்கு நன்மை வராது. ஆனால் இவர் அகில உலகம்—அகில உலகம்! என்று கூறுவதால் மட்டும், நன்மைகள் வழியுமா!

எளிதாக, அவர்களைக் கண்டிக்கப் புறப்பட்டு விட்டார்.

இதனை எடுத்துப் போட்டு ஏடுகளும், பிரமாதப்படுத்துகின்றன!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at"Dravidanadu" Press,
25, Tirukkachinambi St., Kancheepuram.